19.12.15

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தேசிய ஊரக வேலை திட்டத்தில் மரக்கன்றுகள் நடும் பணி தீவிரம்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், மரக்கன்றுகள் நடும் பணி விரைவு படுத்தப்பட்டுள்ளது. இது குறித்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் மந்திராசலம் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள, 333 பஞ்சாயத்துகளிலும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் பதிவு செய்து, அடையாள அட்டை பெற்றவர்களுக்கு வாரத்தில், ஆறு நாட்கள் பணி வழங்கப்பட்டு வருகிறது. தற்போது மழை பாதிப்பு முடிந்த நிலையில், ஏழை எளிய மக்களுக்கு முழு அளவில் வேலை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி மரக்கன்றுகள் நடும் பணி, ஏரி வரத்து கால்வாய் சீர் செய்யும் பணி, தனிநபர் கழிவறை அமைக்கும் பணி, பண்ணைக்குட்டை வெட்டும் பணி போன்ற பணிகளை விரைவு படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் ஏழை எளிய மக்கள் அனைவரும், பஞ்சாயத்து கிராம தொகுப்பில் நடக்கும் பணியில் கலந்து கொண்டு, பயன் அடையலாம். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 30 பஞ்சாயத்துகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகளை தூய்மை காவலர்கள் மூலம் அகற்றும் பணியை விரைவாக செய்ய, கிராம அளவிலான வறுமை ஒழிப்பு குழு பொறுப்பாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மூலிகை பண்ணை அமைப்பதில் மாணவர்கள் ஆர்வம்

பந்தலுார்: பந்தலுார் அருகே கரியசோலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மூலிகை பண்ணை அமைப்பதில் மாணவர்கள்

ஆர்வம் காட்டி வருகின்றனர். பந்தலூர் அருகே கரியசோலை பகுதியில் செயல்படும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு தண்ணீர் வசதியில்லாத நிலையில்; பள்ளி மாணவர்கள் வீடுகளிலிருந்து கொண்டுவரப்படும் தண்ணீரை பயன்படுத்தி வந்தனர். அது குறித்து 'தினமலரில்' படத்துடன் செய்தி வெளியானது. இதையடுத்து,கூடலூர் ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் நேரடி ஆய்வு செய்து தண்ணீர் வசதி ஏற்படுத்தி கொடுத்துள்ளனர். இதன்பின், பள்ளி சுற்றுச்சூழல் மன்றம் சார்பில், மூலிகை பண்ணை அமைப்பதில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர். இங்கு, மாணவர்களின் வீட்டு தோட்டங்களில் உள்ள மூலிகை செடிகள் மற்றும் ஆசிரியர்கள் மூலம் பண்ணைகளிலிருந்து பெறப்பட்ட மூலிகை செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளன. இதில், புற்றுநோயை கட்டுப்படுத்தும், லஷ்மிதரு; மூலம் மற்றும் தலைவலியை குணப்படுத்தும் புளியாரை; வயிற்றில் ஏற்படும் கல்லை கரைக்கும் தன்மை கொண்ட கல்லுருக்கி மற்றும் வேம்பு, பூளைப்பூ, தும்பை, மலைவேம்பு, முடக்கற்றான், கற்றாழை, நாவல், ஆடாதோடை, செங்கீரை, நித்தியகல்யாணி, துளசி, சித்தரத்தை உள்ளிட்ட, 25 வகையான மூலிகை செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளன. இதனை பராமரிக்கும் பொறுப்பை, சுற்றுச்சூழல் மன்ற மாணவர்கள், பள்ளி தலைமை ஆசிரியர் பூபதி, ஆசிரியர்கள் செல்வநாயகம், மணிவாசகம், மணிகண்டன், பத்மாவதி, மார்கிரேட்மேரி மற்றும் பள்ளி பி.டி.ஏ. நிர்வாகத்தினர் ஏற்றுள்ளனர்.

## தென்னை, மா என, 15,600 மரங்களை வளர்த்து அசத்தி வரும் திருச்சி மத்திய சிறை கைதிகள்

திருச்சி: திருச்சி மத்திய சிறை வளாகத்தில் தென்னை, மா, சவுக்கு, பலா என, 15 ஆயிரத்து, 600 மரங்களை கைதிகள் வளர்த்து வருகின்றனர். இதில், குறுவை தென்னை மரங்களில், கொத்துக் கொத்தாக காய்கள் பிடித்துள்ளன. திருச்சி மத்திய சிறை கைதிகள், விவசாயம் சார்ந்த தொழில்களில் அதிகம் ஈடுபட்டு வருகின்றனர். திருச்சி, கரூர், அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த, 1,280 கைதிகள், திருச்சி மத்திய சிறையில் உள்ளனர். மத்திய சிறை

கண்காணிப்பாளராக முருகேசன் பணியாற்றுகிறார். மத்திய, மாநில அரசுகள் மரம் வளர்ப்பை வலியுறுத்தி வரும் நிலையில், திருச்சி மத்திய சிறை வளாக தோட்டத்தில் தென்னை, தேக்கு, பலா, மா, சவுக்கு உள்ளிட்ட பல்வேறு வகையான, 15 ஆயிரத்து, 600 மரங்களை, 60 ஏக்கரில் வளர்த்து வருகின்றனர். இது குறித்து மத்திய சிறை கண்காணிப்பாளர் முருகேசன் கூறியதாவது: சிறை வளாகத்தில் நெல், கரும்பு, காய்கறிகள் மட்டுமின்றி, 60 ஏக்கரில், பல்வேறு மரங்கள் வளர்க்கப்படுகின்றன. மூன்று தோட்டங்களில், 25 ஏக்கரில், 1,735 குறுவை (குட்டைரகம்) தென்னை மரங்கள், இரண்டு ஏக்கரில், 10 ஆயிரம் சவுக்கு மரங்கள், 20 ஏக்கரில், 1,060 மாமரங்கள், தலா ஒரு ஏக்கரில், 300 முந்திரி மற்றும் முருங்கை மரங்கள், ஏழு ஏக்கரில், 750 பலா மரங்கள், ஒன்றரை ஏக்கரில், 850 வாழை மரங்கள், 200 மாதுளை மரங்கள், எலுமிச்சை, நாவல், சப்போட்டா, நெல்லி, மூங்கில், தேக்கு மரங்கள் என, மொத்தம், 15 ஆயிரத்து, 600 மரங்கள் வளர்க்கப் படுகின்றன. இங்குள்ள குறுவை தென்னை மரங்கள், நான்கரை ஆண்டுகளில் காய் பிடிக்கும் ரகம் கொண்டவை. இவை, 40 ஆண்டுகள் வளர்ச்சி உடையவை. முதல் தோட்டத்தில் உள்ள தென்னை மரங்களில், தற்போது கொத்துக் கொத்தாக காய்கள் பிடித்து உள்ளன. ஒட்டுமொத்த தென்னை மரங்களும், இரண்டு ஆண்டுகளில் காய்கள் பிடித்து பலன் தரத் துவங்கும். எதிர்காலத்தில் பயன் தரக்கூடியதாக இந்த மரங்கள் இருக்க வேண்டும் என்ற நோக்கில் வளர்க்கப்படுகின்றன. கைதிகளும் ஆர்வத்துடன் மரங்களை வளர்த்து வருகின்றனர். மரங்களுக்கு மத்தியில் ஊடு பயிராக சிறு தானியங்கள் பயிரிட்டு உள்ளோம். எதிர்காலத்தில் சிறைத்துறைக்கு வருவாயை மரங்கள் ஈட்டித்தரும். இவ்வாறு அவர் கூறினார்.

**நத்தத்தில் தென்னை நார் தொழில் மும்முரம்**

நத்தம்:நத்தம் பகுதியில் பருவமழை குறைந்ததை அடுத்து தென்னை நார் உற்பத்தி மற்றும் அதன் சார்பு தொழில்கள் மும்முரம் அடைந்துள்ளது. நத்தம், கோபால்பட்டி, சாணார்பட்டி பகுதியில் அதிக அளவில் தென்னை சாகுபடி நடக்கிறது. தென்னை மரம் மூலம் கிடைக்கும் முக்கிய விளை

பொருளான தேங்காயில் இருந்து உரித்து எடுக்கப்படும் மட்டையை பயன்படுத்தி பல்வேறு பொருட்கள் தயாரிக்கப்படுகிறது. அதில் கயிறு உற்பத்தி பிரதானமானது. மட்டையில் இருந்து கிடைக்கும் நார் மூலம் பல ரகங்களில் கயிறு உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்கு தென்னை நார் நன்கு உலர்ந்த நிலையில் இருக்க வேண்டும். ஒத்தக்கடை, கோபால்பட்டி, நத்தம், எரமநாயக்கன்பட்டி, கணவாய்பட்டி, சிறுகுடி பகுதிகளில் கயிறு உற்பத்தி செய்யப்படுகிறது. இப்பகுதியில் உற்பத்தியாகும் கயிறுகள் பிற மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகிறது. கடந்த சில வாரங்களாக நத்தம் சுற்று வட்டார பகுதிகளில் சாரல் மழை பெய்து வந்தது. இதனால் தென்னை நாரில் ஈரப்பதம் ஏற்பட்டு கயிறு உற்பத்தி முடங்கியது. தற்போது மழை ஓரளவு ஓயந்து விட்டதால் தென்னை நாரை உலர வைத்தல், கயிறு திரிப்பது உள்ளிட்ட பணிகளில் தொழிலாளர்கள் மும்முரம் காட்டி வருகின்றனர்.

**மழைக்குப் பின் பணிகள் மும்முரம்:விவசாய தொழிலாளர்கள் "பிஸி'**

ஒட்டன்சத்திரம்:மழை நின்றதால் ஒட்டன்சத்திரம் பகுதியில் வேளாண் பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது. விவசாய தொழிலாளர்களுக்கு மவுசு அதிகரித்ததால் கூலி உயர்ந்துள்ளது. தொடர் மழை காரணமாக ஒட்டன்சத்திரம் பகுதிகளில் உள்ள குளங்கள் பரப்பலாறு அணை நீரால் நிரம்பி வருகின்றன. இதனால் கிணறுகள், போர்வெல்களுக்கு நீர்வரத்து ஓரளவு ஏற்பட்டது. இதனைப் பயன்படுத்தி விவசாயிகள், காய்கறிகள், தானியங்களை விதைப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். பல இடங்களில் வெங்காயம் நடுதல், கடலை விதைத்தல், களை எடுத்தல் மற்றும் பாத்தி பிடித்தல் உள்ளிட்ட பணிகள் ஒரே நேரத்தில் நடந்து வருகிறது. இப்பகுதியில் <இருந்த கூலித் தொழிலாளர்களில் பலர் பிழைப்பு தேடி திருப்பூர் மற்றும் மில் வேலைகளுக்கு சென்று விட்டனர். இதனால் விவசாய தொழிலாளர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே வேறு பகுதிகளில் இருந்து அவர்களை வாகனங்கள் மூலம் அழைத்துச் செல்கின்றனர்.எனவே மழையால் முடங்கி கிடந்த விவசாய கூலி தொழிலாளிகள், இப்போது படு"பிசி'யாகி விட்டனர். வேலை செய்ய தெரியாதவரை கூட எண்ணிக்கைக்காக கூட்டிச் செல்லும் நிலை

உள்ளது. குறிப்பிட்ட நாட்களுக்குள் வேலையை முடித்தால் தான் மகசூல் கிடைக்கும் என்பதால் கூலி அதிகம் கொடுத்தாவது, வேலைக்கு அழைத்துச் செல்கின்றனர். மழைக்கு முன்பு களை எடுக்க கூலி ரூ.150 இருந்தது. தற்போது ரூ.230 வரை கொடுத்தாலும் ஆட்கள் கிடைக்காத நிலையே உள்ளது.

**நெற்பயிரை தாக்கும் இலைக்கருகல் நோய்**

திண்டுக்கல்;மழைக்காலத்தில் அதிகளவில் நெற்பயிரை தாக்கும் இலைக்கருகல் நோயை தடுக்க மக்காச்சோள ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் பரமசிவம் ஆலோசனை கூறினார். அவர் கூறியதாவது: மழைக்காலங்களில் நெற்பயிரை இலைக்கருகல், குலைநோய்கள் தாக்கக்கூடும். இலைக்கருகல் நோயால் நாற்றுகள் மஞ்சளாகி வாடிவிடும், இலையின் நூனிப்பகுதியில் இருந்து கருகி காய்ந்து விடும். அதிகாலை நேரங்களில் இளம்புள்ளிகளின் மேல் பனித்துளி போல் திரவம் வடிந்து காணப்படும். இவை அதிக காற்று மிகுந்த உரமளித்தல், பாசனநீர் , காற்றுடன் கலந்த மழை ஆகியவை ஒரு பயிரிலிருந்து மற்ற பயிருக்கு நோயை பரப்புகிறது. இதனை தடுக்க சரிவிகித உரமளித்தல் வேண்டும். மிகுதியான தழைச்சத்து அளிப்பதை தவிர்க்க வேண்டும். நோய் தாக்கிய வயலில் இருந்து நீர் மற்ற வயலுக்கு செல்வதை தடுக்க வேண்டும். மேலும், வேப்பெண்ணெய் அல்லது வேப்பங்கொட்டை சாறு தெளிக்க வேண்டும். குலை நோய் தாக்கினால் இலைகளின் மேல் வெண்மை, சாம்பல் நிற மையப்பகுதியுடன் கண்வடிவ புள்ளிகள் காணப்படும். இதை தடுக்க தழைச்சத்து உரத்தை மூன்றாக பிரித்து இட வேண்டும். பூசன கொல்லிகளை அதிக அளவு தெளிக்க கூடாது. ஒரு லிட்டர் நீரில், ட்ரைசைகலசோல் 1 கிராம் அல்லது கார்பன்டாசிம் 10 கிராம் வீதம் கலந்து தெளிக்க வேண்டும், என்றார்.

## நீர்வளம் பெருகியதால் நடவுப்பணிகள்... கிராமங்களில் புத்துயிர் பெற்ற நெல் சாகுபடி

தியாகதுருகம்: விழுப்புரம் மாவட்டத்தில், கனமழை காரணமாக நீர்நிலைகள் நிரம்பியதால், கிராமப் பகுதிகளில் மீண்டும் நெல் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்ட துவங்கியுள்ளனர். விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளாக தொடர்ந்து பருவமழை ஏமாற்றியதால் கடும் வறட்சி நிலவியது. மழை காலங்களில் கூட ஏரி, குளங்களில் தண்ணீர் இன்றி வறண்டு பரிதாபமாக காட்சியளித்தது. இதனால் நீர்நிலை வற்றியதால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கிணற்று பாசனமும் கைகொடுக்காமல் போனதால் விவசாயிகள் தவிப்புக்கு ஆளாயினர். கள்ளக்குறிச்சி பகுதியில் உள்ள கோமுகி, மணிமுக்தா அணைகள் நிரம்பாததால் ஆயக்கட்டு பாசனமும் முடங்கியது. இதனால் இப்பகுதியில் நெல் சாகுபடி 3 ல் 1 பங்காக குறைந்தது. மணிமுக்தா அணையை ஒட்டியுள்ள பாசன நிலங்கள் தண்ணீர் இன்றி கரம்பாகவே விடப்பட்டது. விவசாயத்தை ஜீவாதாரமாக கொண்ட பலர் வருவாய்க்கு வழியின்றி சிரமப்படும் நிலை ஏற்பட்டது. கடந்த ஒரு மாதமாக பெய்த கனமழையால் மாவட்டத்தில் உள்ள அனைத்து நீர்நிலைகளும் நிரம்பி வழிகிறது. அணைகளில் தொடர்ந்து உபரி நீர் வெளியேற்றப்பட்டதால் தடுப்பணைகள் நிரம்பியது. ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து, கிணறுகளும் நிரம்பியுள்ளன. இது நன்செய் பயிரான நெல் சாகுபடிக்கு நம்பிக்கையை கொடுத்துள்ளது. கனமழையை தொடர்ந்து மாவட்டத்தின் அனைத்து பகுதியில் உள்ள கிராமங்களி<லு<ம் விவசாயப் பணிகள் சுறுசுறுப்படைந்துள்ளது. குறிப்பாக நெல் நடவுப்பணிகளில் கவனம் செலுத்தி வருகின்றனர். தென்மேற்கு பருவமழை ஏமாற்றிய நிலையில் கடந்த ஆண்டுகளை போலவே வடகிழக்கு பருவமழையும் குறைந்த அளவே பெய்யும் என்று கருதிய பலர், நெல் நடவு செய்யவேண்டிய வயலில் உளுந்து பயிரிட்டனர். இத்தருணத்தில் எதிர்பாராமல் கிடைத்த கனமழை காரணமாக நெல் சாகுபடிக்கு ஏற்ற சூழல் உருவாகியுள்ளதால் கரம்பாக விடப்பட்ட நிலங்களில் நெல் நடவுப்பணிகளை துவக்கியுள்ளனர். ஒரே நேரத்தில் பலர் உழவு வேலைகளை துவக்கியதால் போதிய நாற்றுக்கள்

கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் அதிக விலை கொடுத்து வெளியூர்களுக்கு சென்று நாற்றுக்களை வாங்கி வந்து நடவு செய்து வருகின்றனர். சிலர் நாற்றுவிடாமல் நேரடியாகவே நெல் விதை களை வயலில் தூவி பராமரித்து வருகின்றனர். கிராமங்களில் எங்கு திரும்பினாலும் நெல் நடவுப்பணிகள் தீவிரமாக நடப்பதை காணமுடிகிறது. குறிப்பாக அணை, ஏரி ஆகியவற்றின் ஆயக்கட்டு பாசனம் பெறும் நிலங்களில் நெல் சாகுபடி வேலைகளை விவசாயிகள் நம்பிக்கையுடன் செய்து வருகின்றனர். இதனால் நெல் பயிரிடும் பரப்பு வேகமாக அதிகரித்து வருகிறது. இப்பகுதியில் கரும்பு அதிக அளவு பயிரிட்டு வந்த நிலையில் நீர்வளம் குறைந்து விவசாயிகள் புறக்கணித்து வந்த நெல் சாகுபடி மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது. இதனால் நெல் உற்பத்தி 2 மடங்காக அதிகரிக்க வாய்ப்புள்ளது. விவசாயிகளுக்கு தேவையான உரம், பூச்சு மருந்து கிடைத்திட வேளாண்துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## இயந்திரம் மூலம் நெல் நடவு பணிகள்

அவலூர்பேட்டை: மேல்மலையனூர் ஒன்றியத்தில் நெல் நடவு பணிகளில், விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். மேல்மலையனூர் ஒன்றியத்தில், பெரும்பாலான இடங்களிலும் தொடர் மழையினால் கிணறுகளில் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் நெல் வயல்களில் நடவுப்பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். துறிஞ்சிப்பூண்டி கிராமத்தில் 40 எக்டர் நிலப்பரப்பில், விவசாயிகள் இயந்திரம் மூலம் நெல் நடவு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் குறைந்த நேரத்தில் நடவு பணிகள் விரைந்து முடிகிறது. இயந்திர நடவினை வேளாண் அலுவலர் ஆனந்தஜோதி, உதவி வேளாண்அலுவலர் சக்திவேல் மற்றும் விவசாயிகள் பார்வையிட்டனர்.

## போதிய அளவு உரம் இருப்பு: கலெக்டர் ஜெயந்தி தகவல்

கரூர்: கரூர் வேளாண் குறைதீர் கூட்டத்தில் கலெக்டர் ஜெயந்தி பேசியதாவது: கரூர் மாவட்டத்தில், ஆண்டு சராசரி மழையளவு, 652.2 மி.மீ., இதுவரை, 819.6 மி.மீ., மழை கிடைக்கப் பெற்றுள்ளது. அமராவதி, காவிரி ஆறுகள், வாய்க்கால்களிலும் தண்ணீர் செல்வதால்

நீர்மட்டம் உயர்ந்துள்ளது. சம்பா பருவ சாகுபடியை பொறுத்தவரை, 12 ஆயிரத்து, 322 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போதுள்ள பயிர் சாகுபடி பரப்புக்கு தேவையான யூரியா, 117 மெட்ரிக் டன், டி.ஏ.பி., 592 மெட்ரிக் டன், பொட்டாஷ், 752 மெட்ரிக் டன், கலப்பு உரம், 816 மெட்ரிக் டன் அனைத்து தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உரக்கடைகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக, 17 ஆயிரத்து, 830 விவசாயிகளுக்கு, 114.19 கோடி ரூபாய் பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

## குப்பைக்கு போகும் பூண்டு:கழிவுகளில் இயற்கை உரம்

பெரியகுளம்:பெரியகுளம் பகுதியில் குப்பைக்கு போகும் வெள்ளைப்பூண்டு கழிவுகளை, இயற்கை உரமாக்கி, விவசாயிகள் மகசூலை அதிகரிக்கின்றனர். வடுகபட்டி, தாமரைக்குளம் பகுதிகளில் தொடர்ந்து ரசாயண உரங்கள் பயன்படுத்தப்பட்ட நிலங்கள், ஐந்தாண்டுகளுக்கு பிறகு வளம் குறைந்து விளைச்சல் பாதிக்கிறது. அதன் பிறகு விவசாயிகள் மண்பரிசோதனை செய்து மண்ணின் வளத்தை அதிகப்படுத்த சிரமப்படுகின்றனர். இதை தவிர்க்க, விவசாயிகள் மண்ணை உழுது இயற்கை உரங்களான மாட்டுசாணம், புண்ணாக்கு கரைசல் ஆகியவற்றை போட்டு, சணம்பு உள்ளிட்ட கீரைச்செடிகளை பயிர் செய்கின்றனர். இத்துடன் இலவசமாக கிடைக்கும் வெள்ளைப்பூண்டு கழிவுகளை இயற்கை உரமாக பயன்படுத்தி, அதிகளவு விளைச்சல் பெறுகின்றனர். இதுகுறித்து விவசாயி தனபால் கூறுகையில், ""பூண்டின் அனைத்து பகுதிகளும் மக்களுக்கு பயன்படுகிறது. இலவசமாக கிடைக்கும் வெள்ளைப்பூண்டு கழிவுகளை சேகரித்து, நிலத்தில் கொட்டி உழுகும் போது, மண்ணில் தீங்கு விளைவிக்கும் வேர்புழுக்கள் சாகுகின்றன. மண்ணின் வளமும் அதிகரிக்கிறது. இதனால் வாழை, கரும்பு, தென்னை உள்ளிட்ட பயிர்களின் விளைச்சல் அதிகரிக்கிறது," என்றார்.

## மூல வைகை ஆற்றில் புதிய தடுப்பணைகள்

வருஷநாடு: கடமலை-மயிலை ஒன்றிய பகுதிகளில் உள்ள "மூல' வைகை ஆற்றில் ரூ.15 கோடி மதிப்பில் புதிய தடுப்பணைகள் கட்டப்பட்டு வருகிறது. வைகை ஆற்றின் உற்பத்தி இடமான வருஷநாடு, வா லிப்பாறை, காந்திக்கிராமம், அஞ்சரபுலி, கூடம் பாறை, அரசரடி, உடங்கல், வெள்ளிமலை ஆகிய பகுதிகளில் கடந்த 3 ஆண்டுகளாக போதிய மழை இல்லை. இதனால் இப்பகுதிகளில் தொடர்ந்து குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு வந்தது. வைகை ஆற்றுப்படுகையில் உள்ள விவசாயிகள், நிலத்திற்கு நீர் பாய்ச்ச முடியாமல் விவசாயத்தை கைவிட்டு கேரளா, குஜராத் போன்ற வெளி மாநிலங்களுக்கு கூலி வேலைக்கு செல்ல வேண்டிய அவல நிலை ஏற்பட்டு வந்தது. இந்த நிலையை தவிர்க்க, "மூல' வைகை ஆற்றில் தடுப்பணைகள் கட்டி நீரை தேக்க வேண்டும், என மாவட்ட நிர்வாகத்திற்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். அதைத்தொடர்ந்து கடந்தாண்டு ரூ.4 கோடி மதிப்பில் வருஷநாடு, அம்பாசமுத்திரம் பகுதியிலும், தற்போது ரூ.18 கோடி மதிப்பில் மணலாத்துக்குடிசை, கோவிந்த நகரம், கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை ஆகிய பகுதிகளிலும் புதிய தடுப்பணைகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு ஒன்றியக்குழுத் தலைவர் முருக்கோடை ராமர் தெரிவித்தார்.

## சேலம் மாவட்டத்தில் மழை அதிகம்: 1.93 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிர் சாகுபடி

சேலம்: 'சேலத்தில், சமீபத்திய மழையால், 1.93 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது' என, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. விவசாயிகள் சாடல்: மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், கலெக்டர் சம்பத் தலைமையில், நேற்று நடந்தது. அதில், வேளாண் இயந்திரங்கள் உரிய விவசாயிகளுக்கு வழங்கப்படுவதில்லை; அதிகாரிகள் லஞ்சம் வாங்கிக்கொண்டு கடனுதவியை வழங்குகின்றனர். கடந்த கூட்டத்தில், 'இதுதொடர்பாக விசாரிக்க சிறப்பு குழு நியமிக்கப்படும்' என, கலெக்டர் தெரிவித்தது என்னாச்சு? கால்நடைகளுக்கு, எந்த மருத்துவமனையிலும், கோமாரி

நோய் தடுப்பூசி போடப்படுவதில்லை. ஆடுகளுக்கு வாயில் புண் வந்து கஷ்டப்படுகின்றன. விவசாய பயிர்களுக்கு இன்சூரன்ஸ் செய்தபோதும், உரிய முறையில் வழங்கப்படுவதில்லை. அந்த இன்சூரன்ஸ் நிறுவனம் விளக்கம் அளிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட குறைகள் மற்றும் கருத்துகளை, விவசாயிகள் கூறினர். கலெக்டர் பதில்: அதற்கு கலெக்டர், 'சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் குறிப்பு எடுத்துக் கொள்ளுமாறும், தங்களுடைய மொபைல் எண்ணை, விவசாயிகளுக்கு தெரிவிக்குமாறும்' கூறினார். இதனால், கேள்வி கேட்ட விவசாயிகள், கூட்டத்தில் சரியான விவரம் பெற முடியாமல் தடுமாறினர். ஆடுகளுக்கான பாதிப்பு குறித்து, கால்நடைத்துறையினர் கூறுகையில், 'கோமாரி நோயை காட்டிலும், ஆட்டுக்கொல்லி நோய் மிகவும் மோசமானது. அதற்கு, அதன் வாழ்நாளில் ஒருமுறை தடுப்பூசி போட்டால், எப்போதும் பிரச்னை இருக்காது, ஆடுகளுக்கான வாய்ப்புண்ணை தவிர்க்க, வேப்பங்கொழுந்து, மஞ்சளை சேர்த்து அரைத்து தடவினால் குணமாகும்' என்றனர். 39 சதவீதம் கூடுதல் மழை : வேளாண் இணை இயக்குனர் இளங்கோ கூறியதாவது: சேலத்தில், ஆண்டு முழுவதும், 993 மி.மீ., மழை பெய்யும். இம்முறை, 1,139 மி.மீ., பெய்துள்ளது. அக்., 1ம் தேதி முதல் வடகிழக்கு பருவமழையை கணக்கிடுகையில், வழக்கமாக, 316 மி.மீ., பெய்யும். இம்முறை, 444 மி.மீ., மழை பெய்துள்ளது. இது, 39 சதவீதம் அதிகமாகும். மழைப்பொழிவால், மாவட்டம் முழுவதும், 1.93 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு, நடப்பு ஆண்டு பிரச்னையில்லாத வகையில் அமையும். இவ்வாறு அவர் கூறினார்.

### வேளாண் விரிவாக்க மையத்தின் மூலம் விதை கிராமத்திட்ட பயிற்சி

நாமக்கல்: நாமக்கல், கபிலர்மலை வட்டாரத்தில், வேளாண் விரிவாக்க மையத்தின் மூலம், விதை உற்பத்தி செய்யும், 40 விவசாயிகளுக்கு, விதை கிராமத் திட்டத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கு, வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தலைமை வகித்தார். தொழில் நுட்ப மேலாளர் கிருஷ்ணசாமி வரவேற்றார். இதில், நெல், சிறுதானியம், எண்ணெய்

வித்துக்கள் மற்றும் பயறுவகை பயிர்களில், உயர்ரக தரமான விதைகள் உற்பத்தி செய்வது பற்றிய பயிற்சி வழங்கப்பட்டது. மேலும், தரமான விதை உற்பத்திக்கான தொழில் நுட்பங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. முன்னோடி விவசாயிகள், அலுவலர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

**கால்நடை மருத்துவ முகாம்**

ப.வேலூர்: கபிலர்மலை அடுத்த, பெரிய சோளிபாளையம் ஊராட்சி குமாரசாமிபாளையத்தில், கால்நடை சிறப்பு மருத்துவ முகாம் நடந்தது. முகாமை பெரிய சோளிபாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் மணி தொடக்கி வைத்தார். இதில், நோயுற்ற கால்நடைகளுக்கு அறுவை சிகிச்சைப் பணி, ஈனியல் சார்ந்த சிகிச்சை, சினைப் பரிசோதனை மற்றும் குடல்புழு நீக்கப்பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன. மலட்டுத் தன்மை உள்ள மாடுகளுக்கு தாது உப்புக் கலவைகள் இலவசமாக வழங்கப்பட்டன. கபிலர்மலை, கால்நடை மருந்தக உதவி மருத்துவர் தனவேல், ஆய்வாளர் வெங்கடாசலம், உதவியாளர் பொன்னம்மாள் உள்ளிட்ட மருத்துவக் குழுவினர், சிகிச்சை அளித்தனர்.

**பண்ணை குட்டையில் பல ரக மீன்கள் இயற்கை உணவில் வளர்கிறது**

சிங்கம்புணரி: சிங்கம்புணரி மீன் வளர்ப்பு பண்ணையில் பலரக மீன்கள் காய்கறி கழிவு,தவிடு என வித்தியாசமான முறையில் இயற்கை உணவாக அளிக்கப்பட்டு வளர்க்கப்படுகிறது. மணப்பட்டியில் இறைவை பாசன வசதியுள்ள ஒரு பண்ணைக்குட்டையில் கட்லா,ரோகு, மெருகால்,கண்ணி கெண்டை, சிலேபிக் கெண்டை உட்பட பல ரக மீன் குஞ்சுகள் வளர்க்கப்படுகிறது. பவானி அணைக்கட்டு, மணிமுத்தாறு, தஞ்சாவூர் பகுதியிலிருந்து 25 ஆயிரம் குஞ்சுகள் வீதம் பல லட்சம் குஞ்சுகள் கொண்டு வந்து குட்டையில் விடப்படுகிறது. பச்சரிசி, கோதுமை, புண்ணாக்கு தவிடு குஞ்சுகளுக்கு இரையாக கொடுக்கப்படுகிறது. தவளை, நீர்பாம்பு களிடமிருந்து குஞ்சுகளை காப்பாற்ற குட்டையைச் சுற்றிலும் வலை கட்டப்பட்டு பாதுகாக்கப்படுகிறது. ஒரு லட்சம் குஞ்சுகளை நீருக்குள் விட்டால் 25 நாளில் 20 ஆயிரம் குஞ்சுகள் மட்டுமே

பிழைத்து விற்பனைக்கு தயாராகும். ஒரு குஞ்சு ரூ 1.50 முதல் ரூ 2 வரை விலை உள்ளது. சித்திரை முதல் கார்த்திகை வரை மீன் குஞ்சு வளர்க்கும் காலமாக கருதப்படுகிறது.மேலூர், பொன்னமராவதி, திருப்புத்தூர் பகுதிக்கு கண்மாய், குளங்கள்,நீர்நிலைகளில் மீன் வளர்க்க,பலர் வாங்கிச் செல்கின்றனர். 50 நாட்களுக்கு மேல் விற்பனையாகவில்லை என்றால் மீதமுள்ள குஞ்சுகள் அருகில் உள்ள கண்மாய்களில் வளர்க்கின்றனர். வாரச்சந்தையில் கிடைக்கும் முட்டைகோஸ், காலிபிளவர் கழிவுகளை சதுரவடிவில் கம்புகட்டி மீனுக்கு இரை போடுகின்றனர். நோய் தடுப்புக்காகவும்,இரையாகவும் பயன்படும் வகையில் மாட்டுச்சாணம் அதிக அளவில் நீருக்குள் கொட்டப்படுகிறது. இயற்கை உணவால் ஒரு குஞ்சு 6 மாதத்தில் ஒரு கிலோ முதல் ஒன்றரை கிலோ எடையாக வளர்ச்சியடைகிறது. தற்போது ஒரு கிலோ விறால்,கட்லா மீன் கிலோ ரூ 120 - 150 வரை விலையுள்ளது. மீன்கள் குஞ்சு எல்லா நிலையிலும் இயற்கை உணவில் வளர்வதால் பலரும் இந்த மீன்களை விரும்பி வாங்கிச்செல்கின்றனர்.மீன் குஞ்சு வளர்க்கும் அழகர் தெரிவித்தாவது : மீன் வாங்கி சைக்கிளில் கிராமங்களுக்குச் சென்று வியாபாரம் செய்தேன். சொந்தமாக இத்தொழிலை செய்யலாம் என்ற ஆர்வம் ஏற்பட்டது. எனது நிலத்தில் பண்ணை குட்டை அமைத்து மீன் குஞ்சு வளர்த்து வருகிறேன்.மீதியுள்ள குஞ்சுகØளை அருகில் உள்ள கண்மாயை குத்தகைக்கு எடுத்து அதில் இயற்கை முறையில் பலரக மீன்களை வளர்த்து வருகிறேன். நல்ல லாபம் கிடைக்கிறது, என்றார்.

## 27ஆயிரம் கால்நடைகளுக்கு சிகிச்சை

விருதுநகர்:விருதுநகர் மாவட்டத்தில் வெள்ள நிவாரண சிறப்பு சிகிச்சை முகாம்கள் மூலம் 26,945 கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. தும்மு சின்னம்பட்டியில் நடந்த முகாமில் கலந்து கொண்ட கால்நடைத்துறை துணை இயக்குனர் ஜெயராம் கூறுகையில்," வடகிழக்கு பருவமழையால் கால்நடைகள் பாதிக்கப்படாமல் இருக்க சிறப்பு சிகிச்சை முகாம்கள் மாவட்டம் முழுவதும் 41 இடங்களில் நடத்தப்பட்டது. இதில் கால்நடைகளுக்கு தடுப்பூசி, குடற்புழு நீக்கம், தாது உப்பு கலவவை, சத்து பொடி வழங்கல் உட்பட பணிகள் நடந்தது.

இதில் 26 495 கால்நடைகளுக்கு சிசிச்சையளிக்கப்பட்டது. தும்முசின்னம்பட்டி முகாமில் 880 கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது." என்றார். உதவி இயக்குனர் எட்வின் ஜார்ஜ், டாக்டர் ரமேஷ் உட்பட பலர் பங்கேற்றனர்.

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**குற்றாலம் அருவியில் நீர்வரத்து அதிகரிப்பு**



குற்றாலம் பேரருவியில் வெள்ளிக்கிழமை காலையில் நீர்வரத்து அதிகரித்து காணப்பட்டது. குற்றாலம் மலைப் பகுதியில் வெள்ளிக்கிழமை அதிகாலையில் பெய்த பலத்த மழை காரணமாக, பேரருவியில் தண்ணீர் வரத்து அதிகமாக இருந்தது. பாதுகாப்பு வளைவின் மீது தண்ணீர் சீறிப் பாய்ந்தது. இதனால் ஐயப்ப பக்தர்கள் குளிப்பதற்கு காலையில் தடை விதிக்கப்பட்டது. காலை 9 மணிக்குப் பிறகு தண்ணீர் வரத்து குறைந்ததையடுத்து குளிக்க அனுமதிக்கப் பட்டனர். ஐந்தருவி, பழைய குற்றாலம் அருவிகளில் வழக்கம்போல

பயணிகள்குளிக்கஅனுமதிக்கப்பட்டனர்.

## மேட்டூர் நீர்மட்டம் 97 அடியாக உயர்வு

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 97 அடியாக உயர்ந்தது. காவிரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் லேசான மழை பெய்து வருகிறது. இதனால், மேட்டூர் அணைக்கு தொடர்ந்து நீர்வரத்து இருந்து வருகிறது. அணையில் இருந்து பாசனத்துக்கு திறந்துவிடும் நீரைவிட அணைக்கு நீர்வரத்து அதிகமாக இருப்பதால், அணையின் நீர்மட்டம் மெல்ல உயர்ந்து வருகிறது. இதையடுத்து வெள்ளிக்கிழமை காலை அணையின் நீர்மட்டம் 97 அடியாக உயர்ந்தது. அணைக்கு நொடிக்கு 3,800 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 500 கன அடி வீதமும், கிழக்கு மேற்குக் கால்வாய் பாசனத்துக்கு நொடிக்கு 800 கன அடி வீதமும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 61.02 டி.எம்.சி.

## சாத்தூரில் பலத்த மழை

சாத்தூரில் வெள்ளிக்கிழமை பலத்த மழை பெய்தது. சாத்தூர் பகுதியில் கடந்த சில நாள்களாக வெயில் சுட்டெரித்து வந்தது. இந்நிலையில் வெள்ளிக்கிழமை காலை முதலே மேகமூட்டம் காணப்பட்டது. மதியம் 12 மணிக்குமேல் பலத்த மழை பெய்யத் தொடங்கியது. சுமார் அரை மணி நேரம் பெய்த மழையால் சாத்தூர் பிரதான சாலை, நீதிமன்றம் முன்பு, பைபாஸ் சாலை உள்ளிட்ட பகுதியில் தண்ணீர் தேங்கியது. சாலைகளில் தண்ணீர் தேங்குவதைத் தடுக்க நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகன ஒட்டுநர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## ராமநாதபுரம் விவசாயிகளுக்கு ரூ.22 லட்சம் மானியத்தில் வேளாண் இயந்திரங்கள் விநியோகம்

ராமநாதபுரத்தில் 22 விவசாயிகளுக்கு ரூ.22.62 லட்சம் மதிப்பிலான மானியத்துடன் கூடிய வேளாண் இயந்திரங்களை மாவட்ட ஆட்சியர் க.நந்தகுமார் வெள்ளிக்கிழமை வழங்கினார். மாவட்ட ஆட்சியர்

அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், இந்த இயந்திரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் 15 பேருக்கு தலா ரூ.1.25 லட்சம் வீதம் மொத்தம் ரூ.18.75 லட்சம் மானியத்துடன் கூடிய டிராக்டர் இயந்திரங்கள், 2 பேருக்கு தலா ரூ. ஒரு லட்சம் வீதம் மொத்தம் ரூ.2 லட்சம் மானியத்துடன் கூடிய டிராக்டர் இயந்திரங்கள், ஒருவருக்கு ரூ.48,750 மதிப்பில் ரோட்டோவேட்டர் இயந்திரம், ஒருவருக்கு ரூ.10 ஆயிரம் மானியத்தில் விதை விதைக்கும் கருவி, தோட்டக் கலைத்துறையின் சார்பில் 3 பேருக்கு தலா ரூ.40 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.1.20 லட்சம் மானியத்துடன் கூடிய பவர் டில்லர் இயந்திரங்கள் உட்பட மொத்தம் 22 பேருக்கு ரூ.22.62 லட்சம் மானியத்தில் வேளாண் இயந்திரங்களை ஆட்சியர் வழங்கினார். இக்கூட்டத்தில், ஏற்கெனவே விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட மனுக்களின் மீது எடுத்த நடவடிக்கைகள் குறித்தும், வேளாண்மை தொடர்புடைய துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் அதிகாரிகளால் விளக்கம் அளிக்கப்பட்டது. வேளாண்துறை இணை இயக்குநர் நா.வீ.கிருஷ்ணமூர்த்தி, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ச.தமிழ்வேந்தன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) அரிவாசன்,தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர்கள் பா. இளங்கோவன், பொ.அனுசூயா, எஸ்.அழகேசன் மற்றும் ச.பா.தியாகராஜன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள்,விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் பலரும் கலந்து கொண்டனர்.

**கேரட் மகசூல் அதிகரிப்பு: விவசாயிகள் மகிழ்ச்சி**

குன்னூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் கேரட் விவசாயத்தில் மகசூல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு அடுத்தபடியாக மலைத் தோட்ட காய்கறி பயிர்களான உருளைக்கிழங்கு, கோஸ், கேரட் உள்ளிட்டவற்றை பயிர் செய்து அதன் மூலமாக வருமானம் ஈட்டி வருகின்றனர். இந்நிலையில், தற்போது நிலவும் தட்பவெட்ப நிலைக்கு ஏற்ற பயிரான கேரட்டை, குன்னூர், கேத்தி பாலாடா, அதிகரட்டி உள்ளிட்ட பகுதிகளில் பல ஹெக்டேர் பரப்பரளவில் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். கடந்த 2

மாதங்களுக்கு முன்பு நடவு செய்யப்பட்ட கேரட் தற்போது அறுவடைக்குத் தயாராகி உள்ளது. விவசாயிகள் கேரட்டை அறுவடை செய்து, இயந்திரங்கள் மூலமாகக் கழுவி தரம் பிரித்து லாரிகள் மூலமாக மேட்டுப்பாளையம் மொத்த காய்கறி மண்டிக்கு கொண்டு சென்று விற்பனை செய்து வருகின்றனர். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கூடுதலாக கேரட் மகசூல் கிடைத்துள்ளது. மேலும், முன்பு கிலோ ரூ. 20 விலை கிடைத்து வந்த நிலையில் தற்போது ரூ. 40 வரையும் விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு:ஆட்சியர்**

வேலூர் மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்கப்படும் என மாவட்ட ஆட்சியர் இரா.நந்தகோபால் கூறினார். வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்ற விவசாயிகள் பேசியது: மழை வெள்ளத்தால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதால் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடனுக்கு அடமானமாக அளித்த நகைகளை ஏலத்துக்கு கொண்டு வருவதை நிறுத்துவதோடு, வட்டியில்லா கடனுதவி அளிக்க வேண்டும்.

பேர்ணாம்பட்டு ஒன்றியத்தில் உள்ள தோல் தொழிற்சாலையிலிருந்து கழிவு நீர் குழாய் மூலம் அருகில் உள்ள கொத்தூர், பாலூர் பகுதியில் விடப்படுவதால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுகிறது. இதற்கு காரணமாக தொழிற்சாலை நிர்வாகம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். பலத்த மழை காரணமாக விவசாயப் பயிர்கள் முழுமையாக பாதிக்கப்பட்டிருப்பதால் அனைத்து விவசாயிகளுக்கும் இழப்பீட்டுத் தொகை அளிக்க வேண்டும் என வலியுறுத்தினர். கூட்டத்துக்கு தலைமை வகித்த மாவட்ட ஆட்சியர் இரா.நந்தகோபால் பேசியது:

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டுத் தொகை கூட்டுறவு வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். வங்கிக் கணக்கு எண் இல்லாதவர்கள் தொடங்க அறிவுறுத்தப்பட்டு வரவு வைக்கப்படும் என்றார். மாவட்ட வருவாய் அலுவலர் க.மணிவண்ணன், வேளாண்துறை இணை இயக்குநர் ஜெயசுந்தர், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## 25 லட்சம் ஏக்கர் பயிர் பாதிப்பு

பலத்த மழையால் மாநிலத்தில் 25 லட்சம் ஏக்கர் பரப்பளவிலான பயிர்கள் சேதமடைந்திருப்பதால் உரிய இழப்பீட்டை மத்திய, மாநில அரசுகள் உடனடியாக வழங்க வேண்டும். இதுகுறித்து தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் எம்.ஆர்.சிவசாமி வேலூரில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி: கடந்த 5 ஆண்டுகளாகத் தொடர் வறட்சியால் வருமானமின்றி தவித்த நிலையில், தற்போது பெய்த மழையால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே தேசிய வங்கிக் கடன், கூட்டுறவு வங்கிக் கடனை ரத்து செய்ய வேண்டும்.

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் பதிவு செய்த கரும்பை அரைவை செய்யாமல் வேறு ஆலைக்கு மாற்றுவதைக் கைவிட்டு அரைவையைத் தொடங்குவதுடன், கரும்பு நிலுவைத் தொகை ரூ. 7 கோடியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றார்.

## 21-இல் கால்நடை சிறப்பு மருத்துவ முகாம்

நெமிலி ஒன்றியம், சயனபுரம் கிராம மந்தைவெளி மைதானத்தில் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் திங்கள்கிழமை (டிச.21) நடைபெறுகிறது.

இதுகுறித்து வேலூர் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி, ஆராய்ச்சி மையத் தலைவர் ச.சரஸ்வதி வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கால்நடை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து நடைபெறும் முகாமில் கால்நடைகளுக்கு மலடு நீக்கம், மடிநோய், ரத்தம், ஒட்டுண்ணிகள் பரிசோதனை, கோழிகளுக்கு குருணை தடுப்பு மருந்து, ஆடுகளுக்கு தடுப்பூசி போடப்படுகிறது. கால்நடைப் பண்ணையாளர்கள், விவசாயிகள் கால்நடைகளை அழைத்து வந்து பயன்பெற வேண்டும் என அதில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## தீவனத்தை உடனுக்குடன் பயன்படுத்த கோழிப் பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தல்

தயாரிக்கப்பட்ட தீவனத்தை உடனுக்குடன் பயன்படுத்த வேண்டும் என கோழிப் பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட செய்தி: அடுத்த நான்கு நாள்களுக்கு வானம் லேசான மேகமூட்டத்துடனும், மழையற்றும் காணப்படும். வடகிழக்குப் பருவமழையின் தாக்கம் குறைந்துள்ள நிலையில், வெப்ப அளவும் குறைய ஆரம்பித்துள்ளது. இதனால், கோழிகளில் தீவன எடுப்பு அதிகரிக்க ஆரம்பிக்கும், முட்டையின் எடை கூடும். முட்டை ஓட்டின் தரம் குறையத் தொடங்கும். இவற்றை நிவர்த்தி செய்ய அதிக எரிசக்தி கொண்ட உலர்ந்த தீவனம் மற்றும் முட்டை உடைவதை சரி செய்ய வைட்டமின் டி3 ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும். மக்காச் சோளத்தின் ஈரத்தன்மை 11 சதவீதத்துக்கு கீழ் இருத்தல் நல்லது, தயாரிக்கப்பட்ட தீவனத்தை உடனுக்குடன் பயன்படுத்த வேண்டும்,

கோழியின நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் கடந்த வாரம் பரிசோதனை செய்யப்பட்ட இறந்த கோழிகள் பெரும்பாலும் குடல்புண் மற்றும் ரத்தக்கழிச்சல் நோய்களினால் பாதிக்கப்பட்டு இறப்பு ஏற்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. எனவே, பண்ணையாளர்கள் கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனத்தில் கிளாஸ்ட்டியம் கிருமியின் தாக்கம் உள்ளதா என இந்த ஆய்வகத்தில் பரிசோதனை செய்து, அதற்கேற்ப தீவன மேலாண்மை மற்றும் உயிர்ப் பாதுகாப்பு முறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## டிச.22-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும் 22-ஆம் தேதி (செவ்வாய்க்கிழமை) நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தெரிவித்தார். இதுகுறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்தி: கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தலைமையில் மாவட்ட

விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும் செவ்வாய்க்கிழமை (டிச.22) காலை 11 மணியளவில் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் அனைவரும் பங்கேற்று தங்களது குறைகளைத் தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு ரூ. 114 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது**

கரூர் மாவட்டத்தில் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலம் 17,830 விவசாயிகளுக்கு ரூ. 114.19 கோடி பயிர்க் கடனாக வழங்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு தலைமை வகித்த மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி, விவசாயிகளிடம் மனுக்கள் பெற்று, உரிய விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். பின்னர் ஆட்சியர் கூறியது:

கரூர் மாவட்டத்தின் டிசம்பர் மாதம் முடிய கிடைக்க வேண்டிய சராசரி மழையான 652.2 மி.மீ.க்கு இதுவரை 819.6 மி.மீ. மழை பெய்துள்ளது. இந்த மழையை பயன்படுத்தி மாவட்டத்தில் சிறுதானியப் பயிர்கள் 22,851 ஹெக்டேரும், பயிறு வகை பயிர்கள் 12,487 ஹெக்டேரும், எண்ணெய் வித்து பயிர்கள் 5,349 ஹெக்டேரும், கரும்பு 2,281 ஹெக்டேரும், தோட்டக் கலைப் பயிர்கள் 10,458 ஹெக்டேரும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், சம்பா பருவ நெல் சாகுபடி பொருத்தவரை 12,322 ஹெக்டேரும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் திருந்திய நெல் சாகுபடி முறையில் 8,677 ஹெக்டேரும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலம் 17,830 விவசாயிகளுக்கு இதுவரையில் ரூ. 114.19 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது.

தோட்டக் கலைத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் நீடித்த நிலையான வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் (2015-16) நுண்ணீர் பாசனம் அமைக்க விரும்பும் சிறு, குறு விவசாயிகள் 100 சதம் மானியத்திலும் இதர விவசாயிகள் 75 சதம் மானியத்திலும் நுண்ணீர் பாசனம் அமைத்துப் பயன்பெற அருகிலுள்ள வட்டார

தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை உரிய ஆவணங்களுடன் தொடர்பு கொண்டு பயனடையலாம் என்றார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மு. அருணா, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கோமகன், வேளாண் இணை இயக்குநர் மதனகோபால், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் சந்தானம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## 1,544 குளங்களில் 4,160 கனஅடி நீர் சேமிப்பு

மழைநீர் சேகரிப்பு திட்டத்தின்கீழ் சீரமைக்கப்பட்ட 1,544 குளங்களில் 4,160 கனஅடி மழைநீர் சேகரிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தெரிவித்தார். கரூர் மாவட்டம் புங்கம்பாடி கிழக்கு ஊராட்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்டத்தின்கீழ் மகாத்மா காந்தி தேசிய ஊரக வளர்ச்சி முகமை திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை புதன்கிழமை ஆய்வு செய்த அவர் கூறியது:

கரூர் மாவட்டத்தில் விவசாயப் பணிகள் முழு அளவில் மேற்கொள்ள போதிய அளவு தண்ணீர் கிடைக்காத காலக்கட்டத்தில் நிலத்தடி நீரை நம்பி விவசாய பணிகளை மேற்கொள்ளுவதால் சில சமயங்களில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. இந்த நிலையை தவிர்க்கும் வகையில் தமிழக முதல்வர் ஊரக பகுதிகளில் விவசாய நிலப் பகுதியில் பண்ணைக் குட்டை அமைத்து மழை நீரை தேக்கி, விவசாயப் பணிகளுக்கு பயன்படுத்த அறிவுறுத்தியதன் அடிப்படையில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம், பண்ணை குட்டைகள் அமைக்க திட்டமிட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் முதல் கட்டமாக 140 குளங்களில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 420 தண்ணீர் வரத்துவாரி மற்றும் வடிகால் வாரிகள் சீரமைக்கப்பட்டன. மேலும் மாவட்டத்திலுள்ள 8 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 157 ஊராட்சிகளில் 108 பாசன குளங்களும், 1,544 சிறு பாசன குளங்களும் உள்ளன. இந்த நீர் நிலைகளில் பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டு தற்போது பெய்த வடகிழக்கு பருவ மழையால் சுமார் 4,160 கன அடி மழைநீர் சேகரிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் நிலத்தடி நீர் செறிவூட்டப்படுவதால் எதிர்வரும் ஆண்டில் 10,000 ஏக்கர் பரப்பளவிலான தரிசு நிலங்களில் விவசாயப் பணிகளை மேற்கொள்ள முடியும். குளித்தலை மற்றும் கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்ட 102 பண்ணைக் குட்டைகள் முழு கொள்ளளவு மழைநீர் நிரம்பியுள்ளது. இதனால் அப்பகுதியில் அனைத்து விவசாய நிலங்களிலும் பணிகள் நடைபெற்று வருகிறது என்றார்.

**மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிரை காக்க ஆலோசனை**

தஞ்சாவூர் மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட நெற் பயிரைக் காப்பாற்றுவதற்கான ஆலோசனைகளை ஈச்சங்கோட்டை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கல்லூரி முதல்வர் (பொறுப்பு) கு. சாமிஅய்யன், உதவிப் பேராசிரியர் த. பார்த்திபன் தெரிவித்திருப்பது: முழுவதுமாக நீரில் மூழ்கிய பயிர்களில் ஊட்டச்சத்து பற்றாக்குறை காணப்படும். இதை நிவர்த்தி செய்ய முதலில் தண்ணீரை வடிகட்ட வேண்டும். பிறகு ஒரு ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 18 கிலோ ஜிப்சம் மற்றும் வேப்பம் புண்ணாக்கு 4 கிலோ என்ற அளவில் கலந்து இரவு முழுவதும் வைத்து, மறுநாள் காலை மேலுரமாக இட வேண்டும். தண்ணீர் வடிய வாய்ப்பில்லாத இடங்களில் துத்தநாகம் மற்றும் தழைச்சத்து பற்றாக்குறை ஏற்பட்டு நெற்பயிரில் மஞ்சள் மற்றும் பழுப்பு நிறமாகத் தென்படும். இதை சரி செய்ய ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் 2 கிலோ யூரியா (1 சதம்) மற்றும் 1 கிலோ ஜிங்க் சல்பேட் (0.5 சதம்) கலந்து கைத் தெளிப்பான் மூலம் இலை வழியாகத் தெளிக்க வேண்டும். தேவைப்பட்டால் 15 நாட்கள் கழித்து மீண்டும் ஒருமுறை இக்கரைசலைத் தெளிக்க வேண்டும். தண்ணீர் வடிந்த சில வயல்களில் நெற்பயிர்களின் நுனி கருகி மஞ்சள் நிறமாகவும், பின்னர் பழுப்பு நிறமாகவும் மாறுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இவ்வாறு தென்பட்டால் அது பாக்டீரியல் இலைக் கருகல் நோயின் அறிகுறி. இதைக் கட்டுப்படுத்த காப்பர் ஹைட்ராக்ஸைடு என்ற பாக்டீரியா கொல்லி மருந்தை ஏக்கருக்கு 500 கிராம் அல்லது ஏக்கருக்கு 40 கிலோ பசுஞ்சாணம் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீருடன் கலந்து பயிர்கள் நன்கு நனையும்படி தெளிக்க

வேண்டும். பூக்கும் பருவம் அல்லது தண்டு உருளும் பருவத்தில் உள்ள பயிர்களுக்கு வளர்ச்சியை மேம்படுத்த 2 சதம் டிஏபி கரைசல் (4 கிலோ டிஏபி 200 லிட்டர் தண்ணீர்) இலை வழியாகத் தெளிக்க வேண்டும். மேலும், சில இடங்களில் சாறு உறிஞ்சும் தத்துப் பூச்சிகளான பச்சைத் தத்துப்பூச்சி, புகையான் போன்றவற்றின் தாக்கம் காணப்படும். இதைக் கட்டுப்படுத்த மழை நீரை வடிகட்டி, பூச்சிக்கொல்லி மருந்துகளான புரபனோபாஸ் 400 மி.லி. அல்லது இமிடாகுளோபிரிட் 40 மி.லி. என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கரில் தெளிக்க வேண்டும். விவசாயிகள் இந்த உத்திகளைக் கடைப்பிடித்து மழை வெள்ள பாதிப்பிலிருந்து நெற்பயிர்களைக் காத்து அதிக மகசூல் பெறலாம்.

## டிச. 24-ல் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகப் பெருந்திட்ட வளாகத்தில் கீழ் தளத்தில் உள்ள கூட்ட அரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 24-ம் தேதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இதுகுறித்து ஆட்சியர் என். சுப்பையன் தெரிவித்திருப்பது: இந்தக் கூட்டத்தில் விவசாயிகள், முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் அனைவரும் நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தோட்டக்கலைத் துறை போன்ற விவசாயம் தொடர்புடைய கருத்துகளை மட்டும் தெரிவிக்கலாம். இதில், கருத்துகளைத் தெரிவிக்க விரும்புபவர்கள் தங்களது பெயர், ஊர், வட்டாரத்தை டிச. 24-ம் தேதி காலை 9 மணி முதல் 10 மணி வரை கணினியில் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வட்டாரத்துக்கும் பதிவு செய்துள்ள விவசாயிகளில் முதல் இருவர் தங்களது கருத்துகளைத் தெரிவிக்க அனுமதிக்கப்படுவர். மேலும், விவசாயிகள் அளிக்கும் கோரிக்கை மனுக்களை கணினியில் பதிவு செய்து ஒப்புதல் பெற்று, பின்னர் மனுக்களை அளிக்க வேண்டும்.

## மலர், பழச்செடிகள் கண்காட்சி அடுத்த வாரம் தொடங்கும்:ஆட்சியர் தகவல்

காரைக்காலில் மலர், பழச்செடிகள் கண்காட்சி அடுத்த வாரம் தொடங்க உள்ளதாக மாவட்ட ஆட்சியர் இ.வல்லவன் தெரிவித்தார். இக்கண்காட்சிக்காக மகாராஷ்டிர மாநிலம் புனே, ஆந்திர மாநிலம் கடியம் ஆகிய இடங்களில் இருந்து சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மலர், பழச்செடிகள் காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டுள்ளன. இவற்றுடன், நிலையத்தில் பயிர் செய்யப்பட்டிருக்கும் மலர், பழச்செடிகளும் கண்காட்சியில் இடம்பெற உள்ளன. இதற்காக, நிலையத்தில் பயிரிடப்பட்டுள்ள செடிகளை தயார்படுத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை மாவட்ட ஆட்சியர் இ.வல்லவன் வெள்ளிக்கிழமை பார்வையிட்டார். அவரிடம், வேளாண் அறிவியல் நிலையத்தின் செயல்பாடுகள் குறித்தும், கண்காட்சிக்கு வரவழைத்துள்ள செடிகள் குறித்தும் நிலையத் தலைவர் ஆ.சுரேஷ் விளக்கினார். பின்னர், ஆட்சியர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: காரைக்கால் விவசாயிகள், பொதுமக்கள் விருப்பத்துக்கேற்ப மலர், பழச்செடிகள் கண்காட்சி நடத்துவதற்கான ஏற்பாடுகளை நிலையம் செய்திருப்பது வரவேற்புக்குரியது. காரைக்கால் நகரப் பகுதியில், பொதுமக்கள் பங்கேற்கும் வகையிலான இடத்தில் அடுத்த வார முற்பகுதியில் கண்காட்சி நடத்தப்படும். காரைக்கால் மாதூரில் உள்ள வேளாண் அறிவியல் நிலையம் விவசாயிகளுக்காக நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, ஒவ்வோர் ஆண்டும் 30 டன் விதை நெல் உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வழங்கி வருகிறது. அடுத்த ஆண்டு 40 டன் விதை நெல் உற்பத்தி செய்து வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது. நிலையத்துக்குத் தேவையான ஆதரவை மாவட்ட நிர்வாகம் அளித்து வருகிறது. நிலையத்தில் காய்கறி உற்பத்தி, பொங்கல் பண்டிக்கைக்குத் தேவையான மஞ்சள் சாகுபடி, காளான் வளர்ப்பு, முயல் வளர்ப்பு தீவிரமாக நடைபெறுகிறது. அடுத்த ஆண்டிலிருந்து கூடுதல் நிலப்பரப்பில் காய்கறி உற்பத்தி செய்ய நிலையத்தினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. காரைக்கால் விவசாயிகளுக்கு தண்ணீர் தேவை

மிகுதியாக உள்ளது. நீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதில் புதுச்சேரி அரசு சீரிய முறையில் செயலாற்றும் என்றார் ஆட்சியர்.

**கோட்டூர் அருகே கால்நடை மருத்துவ முகாம்**

கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், சேரி கிராமத்தில் கால்நடை பராமரிப்புத் துறை, கோட்டூர் கால்நடை மருந்தகம் சார்பில் கால்நடை சிறப்பு மருத்துவ முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் டி.மோகன்ராஜ் தலைமை வகித்தார். மன்னார்குடி கால்நடை உதவி இயக்குநர் லூர்துசாமி முன்னிலை வகித்தார். தமிழக உணவு, இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் ஆர்.காமராஜ் முகாமை தொடங்கி வைத்து, கால்நடைகளுக்கு நோய் தடுப்பு மருந்து கொடுத்தார். முகாமில், கால்நடை மருத்துவர்கள் குமரேசன், தேவராஜ் தலைமையில் மருத்துவக் குழுவினர் 800 ஆடுகள், 300 மாடுகளுக்கு குடல்புழு நீக்கம், தொண்டை அடைப்பான் உள்ளிட்ட மழை காலங்களில் ஏற்படக்கூடிய நோய்கள் உள்ளதா என கண்டறிந்து, நோய் தாக்குதல்களுக்கு உள்ளான கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். நிகழ்ச்சியில், ஒன்றியக் குழு உறுப்பினர் பா.ராஜாசேட், ஊராட்சித் தலைவர் எஸ். கண்ணன், ஒன்றிய ஆணையர்கள் ராஜேந்திரன், வெங்கடேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**சிற்றாறு பட்டணம் கால்வாயில் தண்ணீர் திறப்பு**

குமரி மாவட்டத்தில் மழையின் தீவிரம் தணிந்த நிலையில் பாசனத்துக்காக சிற்றாறு பட்டணம் கால்வாயில் வெள்ளிக்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது. மாவட்டத்தில் கும்பப்பூ நெல் நடவுப் பணிகள் பெரும்பாலும் முடிவடைந்த நிலையில், பாசனப் பகுதிகளில் தண்ணீர் தேவை அதிகரித்து வருகிறது. தற்போது மழையின் தீவிரம் தணிந்த நிலையில், அணைகளிலிருந்து பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. முதலில் பெருஞ்சாணி அணையும், தொடர்ந்து பேச்சிப்பாறை அணையும் திறக்கப்பட்டன. இந்நிலையில் வெள்ளிக்கிழமை சிற்றாறு அணையின் பிரதானக் கால்வாயான சிற்றாறு பட்டணம் கால்வாய் வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டது. இந்த அணையிலிருந்து முதற்கட்டமாக விநாடிக்கு 100 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

அணைகளில் நீர்மட்டம்: பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 46.09 அடியாகவும், பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 75.18 அடியாகவும், சிற்றாறு 1 அணையின் நீர்மட்டம் 16.89 அடியாகவும், சிற்றாறு 2 அணையின் நீர்மட்டம் 16.99 அடியாகவும், பொய்கை அணையின் நீர்மட்டம் 26.10 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் 54.12 அடியாகவும் இருந்தது. மழை அளவு: மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை காலை நிலவரப்படி அதிகபட்சமாக கன்னிமாரில் 4.8 மி.மீ., சுருளகோட்டில் 3.2 மி.மீ. மழை பதிவாகியிருந்தது.

## கால்நடைகளை இழந்தவர்களுக்கு ரூ.6.56 லட்சம் நிவாரணம்

மாவட்டத்தில் மழை, வெள்ளத்தால் கால்நடைகளை இழந்தவர்களுக்கு ரூ.6.56 லட்சம் இழப்பீட்டுத் தொகையை அமைச்சர்கள் எம்.சி.சம்பத், ஆர்.பி.உதயகுமார் ஆகியோர் வெள்ளிக்கிழமை வழங்கினர். கடலூர் மாவட்டத்தில் கடந்த ஒரு மாதமாகப் பெய்த கனமழையால் கால்நடைகளை இழந்தவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சி, ஆட்சியரின் முகாம் அலுவலகத்தில் நடைபெற்றது. ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் தலைமை வகித்தார். வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் எம்.சி.சம்பத், வருவாய்த்துறை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் ஆகியோர் பாதிக்கப்பட்ட 12 பேருக்கு நிவாரண நிதி வழங்கினர். மேலும், பெராம்பட்டு, ஜெயகொண்டபட்டினம் ஆகிய பகுதிகளில் உயிரிழந்த 43 கால்நடைகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்கினர். மொத்தம் ரூ.6.56 லட்சத்துக்கான காசோலையை பயனாளிகளுக்கு வழங்கினர். மேலும், 335 பயனாளிகளுக்கு ரூ.10.50 லட்சம் மதிப்பீட்டில் பசுந்தீவனம், தாது உப்புகளை வழங்கினர். அப்போது ஆட்சியர் கூறுகையில், மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயல்பு நிலை திரும்பி வருகிறது. எனவே, நிவாரணம் வழங்குதல் மற்றும் சுகாதாரத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. அனைத்து ஊராட்சிகளிலும் ஒட்டுமொத்த துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு, வீடுகள் தோறும் பிளீச்சிங் பவுடர், குளோரின் மாத்திரைகள்

வழங்கப்பட்டுள்ளன. மாவட்டம் முழுவதும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாய நிலம், வீடுகள் குறித்த கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 25 ஆயிரம் குடிசைகளுக்காக பயனாளிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது என்றார். சட்டப் பேரவை உறுப்பினர்கள் செல்வி ராமஜெயம், என்.முருகுமாறன், கடலூர் கோட்டாட்சியர் என்.உமாமகேஸ்வரி, வட்டாட்சியர் எஸ்.சிவா, கடலூர் நகர்மன்றத் தலைவர் ஆர்.குமரன், துணைத் தலைவர் ஜி.ஜெ.குமார், கவுன்சிலர் வ.கந்தன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**சேற்றுப் புண்ணை போக்கும் துளசி**

முதலில் நாம் பாத வெடிப்புக்கான ஒரு எளிய மருந்தை தயார் செய்வோம். இதற்கு தேவையான பொருட்கள் மஞ்சள் பொடி, சுண்ணாம்பு, தேன். சிறிதளவு மஞ்சள் பொடியுடன் சிறிது சுண்ணாம்பு சேர்த்துக் கொள்ள வேண்டும். அதனுடன் சிறிதளவு தேன் சேர்க்க வேண்டும். இவற்றை ஒன்றாக கலக்க வேண்டும். தொடர்ந்து கலக்கும் போது அவற்றின் நிறம் சிவப்பாக மாறி ஒரு களிம்பு போல் ஆகிவிடும். இதை நாம் தொடர்ந்து பாத வெடிப்பின் மீது பூசி வந்தால் தகுந்த நிவாரணம் கிடைக்கும். மஞ்சள் மங்கல பொருளாகவும், உணவுக்கான வாசனை பொருளாகவும் ஒரு சிறந்த மருந்தாகவும் பயன்படுகிறது. இதை பாத வெடிப்புகளுக்கு பயன்படுத்தும் போது பூஞ்சை காளான்களால் ஏற்பட்ட பாதிப்புகள் குறைகின்றன. அதே போல் துளசியை பயன்படுத்தி சேற்றுப் புண்ணுக்கான மருந்தை இப்போது நாம் தயார் செய்யலாம். இதற்கு தேவையான பொருட்கள் துளசி இலை, பூக்கள். இலுப்ப எண்ணெய். இலுப்ப எண்ணெய் அனைத்து நாட்டு மருந்து கடைகளிலும் கிடைக்கும். பூக்கள், இலை, விதைகள் ஆகியவற்றை தேவையான அளவு எடுத்துக் கொண்டு அதை இலுப்ப எண்ணெய் விட்டு வதக்க வேண்டும். பின்னர் இதை நீர் விடாமல் மையாக களிம்பு போல் அரைக்க வேண்டும். இதை சேற்று புண்ணுக்கு பூசி வந்தால் தகுந்த நிவாரணம் கிடைக்கும். சேற்றுப்புண் என்பது பூஞ்ச காளானால் ஏற்படும் ஒரு தோல் நோயாகும்.

இது தோலிலே தங்கியிருந்து அரிப்பு, நீர் கசிவு போன்றவற்றை உருவாக்குகிறது. மழை காலத்தில் நாம் நீண்ட நேரம் ஈரத்தில் நடப்பதாலும், சேற்றிலே நடப்பதாலும் இது போன்ற தொந்தரவுகள் நம்மை பாதிக்கின்றன. இதற்கு இந்த துளசி களிம்பு மிக சிறப்பாக வேலை செய்கிறது. அதே போல் கால் நகங்களை பாதிக்கக் கூடிய மருந்தை தயார் செய்யலாம். மருதாணியை பயன்படுத்தி சேற்று புண், நகசுத்தி போன்றவற்றுக்கான மருந்தை தயார் செய்யலாம். இதற்கு தேவையான பொருட்கள் மருதாணி இலைகள், கடுக்காய் பொடி, மஞ்சள் பொடி, நல்லெண்ணெய், எலுமிச்சை சாறு. மருதாணி இலைகளை நன்றாக பசை போல் அரைத்துக் கொள்ள வேண்டும். இதை சிறிதளவு எடுத்துக் கொள்ள வேண்டும். அதனுடன் சம அளவு கடுக்காய் பொடி சேர்க்க வேண்டும். சிறிதளவு மஞ்சள் பொடியை சேர்க்க வேண்டும். அரை பழம் எலுமிச்சை சாறை இதில் பிழிந்து கொள்ள வேண்டும். பின்னர் இதனுடன் நல்லெண்ணெயை சேர்த்துக் கொள்ள வேண்டும். இதை நன்றாக கலக்கும் போது களிம்பு போல் வரும். இதை சேற்றுப்புண்ணுக்கு பூசி வருவதால் குணம் கிடைக்கிறது. அதே போல் நக சுத்திக்கும் இதை பூசி வருவதன் மூலம் அதில் இருந்து குணம் பெறலாம். இவ்வாறு அன்றாடம் கிடைக்கும் பொருட்களை கொண்டு மழை காலத்தில் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து நாம் குணம் பெறலாம்.

## வைரஸ் காய்ச்சலை போக்கும் பவளமல்லி



பவள மல்லியை நாம் பாரிஜாதம் என்றும் அழைக்கிறோம். மழை வெள்ளத்திற்கு பிறகு வரக் கூடிய டெங்கு. மலேரியா காய்ச்சல் போன்றவற்றை குணப்படுத்தக் கூடிய மருந்துகளை தயார் செய்யலாம். முதலில் நாம் பவளமல்லி இலையை பயன்படுத்தி டைபாய்டு காய்ச்சல் மூளை காய்ச்சல், வைரஸ் காய்ச்சல் மூட்டு வலி போன்றவற்றை போக்கக் கூடிய மருந்தை தயார் செய்யலாம். இதற்கு தேவையான பொருட்கள் பவள மல்லி இலை. பனங்கற்கண்டு. பவளமல்லியின் இலைகள் 4 அல்லது 5 எடுத்துக் கொள்ள வேண்டும். சிறிது பனங்கற்கண்டு சேர்க்க வேண்டும். ஒரு டம்ளர் அளவு நீர் விட்டு கொதிக்க விட வேண்டும் இதை நாம் வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். காலை மாலை இரு வேளைகளிலும் 50 மிலி வரை பருகி வரலாம். இதை பருகுவதன் மூலம் காய்ச்சலை தருகின்ற கிருமிகளை எதிர்த்து நமக்கு உடலுக்கு ஊக்கத்தை தருகிறது. மூட்டுகளின் வலியையும் குறைக்கிறது. அடுத்து நாம் காய்ச்சல் நேரத்தில் நமது உடலில் அதிகரிக்கும் வெப்பநிலையை குறைக்கக் கூடிய மருந்து ஒன்றை தயார் செய்யலாம். பொதுவாக ஈரத்துணியில் பற்று போடுவதுண்டு. அதே போல் கோரைக்கிழங்கை தேய்த்து அதை நெற்றியில் பற்றாக போடுவதன் மூலமும் காய்ச்சலால் ஏற்படும் உடல் சூட்டை தணிக்கலாம். அதே போல் வெட்டிவேர் ஊறப்போட்ட தண்ணீரை எடுத்து காய்ச்சல்

நேரக்கில் உடலை குடைப்பகன் மூலம் காய்ச்சலின் கடுமை குணியும். அதே போல் சாதாரணமாக பலசரக்கு கடைகளில் கிடைக்கக் கூடிய வினிகரையும் பற்று போட பயன்படுத்தலாம். ஒரு சுத்தமான துணியை எடுத்துக் கொண்டு, அதை வினிகரில் முக்கி எடுக்க வேண்டும். பின்னர் துணியை நன்றாக பிழிந்து கொள்ள வேண்டும். இந்த துணியை பற்றாக போடுவதன் மூலம் காய்ச்சல் நேரத்தில் ஏற்பட்டுள்ள உடல் சூடு தணியும். அதே போல் பப்பாளி இலையை பயன்படுத்தி மலேரியா, டெங்கு காய்ச்சலை போக்கக் கூடிய மருந்தை தயார் செய்யலாம். இதற்கு தேவையான பொருட்கள் பப்பாளி இலை அல்லது பழம். சீரகம், எலுமிச்சை சாறு. தேன் இளம் தளிரான பப்பாளி இலைகள் 3 அல்லது 4 எடுத்துக் கொள்ள வேண்டும். பெரிய இலைகளையும் பயன்படுத்தலாம். பப்பாளி இலை கிடைக்காத நேரங்களில் பழத்தையும் பயன்படுத்தி இதை தயார் செய்யலாம். பப்பாளி இலைகளை நன்றாக சுத்தம் செய்து சிறு சிறு துண்டுகளாக வெட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு ஸ்பூன் சீரகம் சேர்க்க வேண்டும். ஒரு டம்ளர் அளவு நீர் விட்டு கொதிக்க விட வேண்டும். இதை வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். இப்போது வெட்டி வைத்திருந்த எலுமிச்சையை பிழிந்து கொள்ளலாம். பின்னர் சிறிதளவு தேன் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதை பருகி வருவகன் மூலம் வைரஸ் காய்ச்சல் போன்றவற்றை போக்குகிறது. அதே போல் நாட்டு மருந்து கடைகளில் பரவலாக கிடைக்கும் நிலவேம்பு சூரணத்தை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். நிலவேம்பு சூரணம் அரை ஸ்பூன், பனங்கற்கண்டு அரை ஸ்பூன் ஆகியவற்றை ஒரு டம்ளர் நீரில் சேர்த்து கொதிக்க விட வேண்டும். இதை அரை டம்ளராக சுருக்கிக் கொள்ள வேண்டும். இதையும் பருகி வருவதன் மூலம் மழை மற்றும் வெள்ளம் போன்ற காலங்களில் ஏற்படும் விஷக்காய்ச்சல், வைரஸ் காய்ச்சல் போன்றவற்றில் இருந்து நிவாரணம் பெறலாம். இதனால் வயிறு வலி போன்ற பிரச்னைகளில் இருந்தும் விடுபடலாம். தற்போது மழை வெள்ள காலங்கள் என்பதால் இவற்றை பயன்படுத்தி மக்கள் காய்ச்சல் போன்றவற்றில் இருந்து விடுபட்டு பயன்பெறலாம்.

## மாங்காய் இஞ்சி



பார்ப்பதற்கு இஞ்சியின் சாயலிலும், வாசனையில் மாங்காயின் மணத்தையும் கொண்டது மாங்காய் இஞ்சி. அதனால்தான் அதற்கு இப்படியொரு வித்தியாசமான பெயர்.மாங்காய் இஞ்சி, மஞ்சள் குடும்பத்தை சார்ந்தது. இது இந்தியாவில் குறிப்பாக குஜராத், மேற்கு வங்காளம், உத்தரப்பிரதேசம், கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டில் அதிகம் விளைகிறது. மாங்காய் இஞ்சி என ஒன்று இருப்பதே பலருக்கும் தெரியாது. அதைப் பலரும் வாழ்நாளில் சுவைத்திருக்கவும் மாட்டார்கள். இஞ்சியா என முகம் சுளிப்பவர்களும், இஞ்சி தின்ன குரங்கு பழமொழியை நினைத்துக் கொள்கிறவர்களும், தைரியமாக மாங்காய் இஞ்சியை சுவைக்கலாம். அதன் மணமும் சுவையும் யாருக்கும் பிடிக்கும்...'' என்கிறார் டயட்டீஷியன் அம்பிகா சேகர். மாங்காய் இஞ்சியின் மருத்துவ மகத்துவங்களை விளக்கமாகச் சொல்கிற அவர், மாங்காய் இஞ்சியை வைத்து வித்தியாசமான 3 ரெசிபிகளையும் செய்து காட்டியிருக்கிறார்.

**என்ன இருக்கிறது? (100 கிராம் அளவில்)**

மாங்காய் இஞ்சியில் கலோரி மிகக் குறைவு. இதில் நார்ச்சத்து மட்டும் அதிகமாக இருக்கிறது. முழுக்க முழுக்க

மருந்தாகபயன்படுகிறது.

கலோரி 53கிலோகலோரிகள்

புரதம் 1.1கிராம்

நார்ச்சத்து 1.3கிராம்

கொழுப்பு 0.7கிராம்

கால்சியம் 25மி.கி.

இரும்புச்சத்து 2.6மி.கி.

மஞ்சள், இஞ்சி போல் மாங்காய் இஞ்சியும் சிறந்த மருத்துவப் பயனைக் கொண்டது. ஆயுர்வேத மருத்துவத்தில் பல நோய்களை குணப்படுத்த இதை பயன்படுத்துகின்றனர். சரும நோய்களைக் குணப்படுத்தவும், இருமல் மற்றும் நுரையீரல் சம்பந்தமான நோய்களை குணப்படுத்தவும், ஜுரம், விக்கல், காது வலி போன்ற நோய்களை குணப்படுத்தவும் ஆயுர்வேதத்தில்

மாங்காய்இஞ்சிபயன்படுகிறது.

**மாங்காய்இஞ்சியின்மருத்துவப்பயன்கள்**

வயிறு சம்பந்தமான பிரச்னைகளையும், வாயுத் தொல்லையையும் சரியாக்குகிறது. ஜீரணத்தை அதிகப்படுத்துதல், பசியைத் தூண்டுதல் போன்றவற்றிற்கு மாங்காய் இஞ்சி பயன்படுகிறது. நுரையீரல் மற்றும் ஆஸ்துமா, இருமல் போன்ற நோய்களை குணப்படுத்த பயன்படுகிறது. உடலின் வளர்சிதை மாற்றத்தை அதிகப்படுத்தபயன்படுகிறது.

புற்றுநோயை குணப்படுத்துவதிலும் மஞ்சளைப் போல ஆன்டி-ஆக்ஸிடென்ட் ஆக பயன்படுகிறது. கேரட், பீட்ரூட் இவற்றுடன் புதினா, மாங்காய் இஞ்சி கலந்து செய்யும் ஜூஸ் புற்றுநோயைக் குணப்படுத்துவதாக கண்டறிந்துள்ளனர். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. பூஞ்சை நோய்களை குணப்படுத்த சரும மருத்துவத்தில் பயன்படுகிறது. சருமத்தில் ஏற்படும் காயம் மற்றும் அரிப்பை குணப்படுத்த இதன் சாறு பயன்படுகிறது. உடற்பயிற்சி செய்யும் போது ஏற்படும் தசை வலியைக் குறைக்க மாங்காய் இஞ்சி கலந்த தேநீர் பயன்படுகிறது. சமையலில் மாங்காய் சீசன் இல்லாத நேரங்களில் மாங்காய் இஞ்சி பயன் படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் முக்கியமாக

ஊறுகாய் செய்யப் பயன்படுகிறது.உயர் ரத்த அழுத்தம் மற்றும் இதய நோயாளிகள் உப்பு இல்லாமல் சாப்பிட வேண்டும் என்பதால், ஊறுகாய்க்குப் பதிலாக மாங்காய் இஞ்சியை எலுமிச்சைச்சாறுடன் பயன்படுக்கலாம்.

**ஸ்பெஷல் ரெசிபி மாங்காய் இஞ்சி தொக்கு**

**என்னென்னதேவை?**

மாங்காய் இஞ்சி - 250 கிராம், புளி - எலுமிச்சை அளவு, மிளகாய் தூள் - 2 டேபிள்ஸ்பூன், உப்பு- தேவைக்கேற்ப, பெருங்காயம் - அரை டீஸ்பூன், துருவிய வெல்லம் - 2 டேபிள்ஸ்பூன், நல்லெண்ணெய் - 2 டேபிள்ஸ்பூன், கடுகு-1டீஸ்பூன்.

**எப்படிச்செய்வது?**

மாங்காய் இஞ்சியைக் கழுவி, காய வைத்து, தோல் நீக்கித் துருவவும். புளியை ஊற வைத்துக் கரைத்துக் கொள்ளவும். கடாயில் 1 டேபிள்ஸ்பூன் எண்ணெய் விட்டு சூடாக்கி, கடுகை வெடிக்க விடவும். பிறகு துருவிய மாங்காய் இஞ்சி சேர்த்து நன்கு வதக்கவும். குறைந்த தணலில் வைத்து இஞ்சி நன்கு வேகும் வரை வதக்கி, பிறகு புளிக்கரைசல் சேர்க்கவும். அந்தத் தண்ணீரில் இஞ்சியானது மேலும் 5 நிமிடங்கள் கொதிக்கட்டும். புளியின் பச்சை வாடை போனதும் மிளகாய் தூள், உப்பு, பெருங்காயம் சேர்த்து நன்கு கலக்கவும். மேலும் 10 நிமிடங்களுக்கு கொதிக்கவிட்டு, துருவிய வெல்லம் சேர்த்துக் கலந்து விட்டு, 20 நிமிடங்கள் மிகக் குறைந்த தணலில் வைத்திருக்கவும். தொக்கு பதத்துக்கு வந்ததும் இறக்கி, நன்கு ஆறியதும் 1 டேபிள்ஸ்பூன் நல்லெண்ணெய் விட்டு, ஏர் டைட் பாட்டிலில் நிரப்பி வைக்கவும்.

**MBCஜூஸ்**

**என்னென்னதேவை?**

மாங்காய்இஞ்சி-5கிராம்,

புதினாஇலை-10,

கேரட்-1,

நெல்லிக்காய்-1/2,

வெல்லம்-10கிராம்,

மிளகுத்தூள்-1/4டீஸ்பூன்,

உப்பு-சிறிதளவு,

பீட்ரூட்-1.

**எப்படிச்செய்வது?**

மாங்காய் இஞ்சி, கேரட், பீட்ரூட் நன்றாக சுத்தம் செய்து தோல் சீவி துருவிக் கொள்ளவும். இத்துடன் நெல்லிக்காய், உப்பு, புதினா சேர்த்து அரைத்து கீரை வடிகட்டியில் வடிகட்டி 2 டீஸ்பூன் வெல்லம் அல்லது தேன், மிளகுத்தூள் சேர்த்து குளிர வைத்து பரிமாறவும். புற்றுநோய் உள்ளவர்களுக்கு வாரம் 3 முறை இந்த ஜூஸ் கொடுத்தால் நிவாரணம் கிடைக்கும்.

**மாங்காய்இஞ்சிஊறுகாய்**

**என்னென்னதேவை?**

மாங்காய் இஞ்சி - 100 கிராம், எலுமிச்சைச்சாறு - 2 டீஸ்பூன், பச்சை மிளகு - 50 கிராம், இந்து உப்பு - தேவையான அளவு (உப்பு எலுமிச்சை ஊறுகாய்).

**எப்படிச்செய்வது?**

மாங்காய் இஞ்சியை தோல் சீவி வட்ட வடிவ சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். இத்துடன் எலுமிச்சைச்சாறு மற்றும் பச்சை மிளகு, உப்பு சிறிதளவு சேர்த்து நன்றாக குலுக்கி ஊற வைத்து BP மற்றும் இதய நோய் உள்ளவர்கள் ஊறுகாயாக பயன்படுத்தலாம். ஊறுகாய் என்றாலே உப்பு, காரம், எண்ணெய் அதிகம் சேர்ந்தது. அதற்கு மாற்றுதான் இந்த ஊறுகாய். உப்புக்குப் பதில் உப்பில் ஊற வைத்த எலுமிச்சை ஊறுகாய் 2 எடுத்து இத்துடன் சேர்த்து ஊற வைக்கலாம்.

**மாங்காய்இஞ்சிதொக்கு**

**என்னென்னதேவை?**

மாங்காய் இஞ்சி - 250 கிராம், புளி - எலுமிச்சை அளவு, மிளகாய் தூள் - 2 டேபிள்ஸ்பூன், உப்பு- தேவைக்கேற்ப, பெருங்காயம் - அரை டீஸ்பூன், துருவிய வெல்லம் - 2 டேபிள்ஸ்பூன், நல்லெண்ணெய் - 2 டேபிள்ஸ்பூன், கடுகு-1டீஸ்பூன்.

**எப்படிச்செய்வது?**

மாங்காய் இஞ்சியைக் கழுவி, காய வைத்து, தோல் நீக்கித் துருவவும். புளியை ஊற வைத்துக் கரைத்துக் கொள்ளவும். கடாயில் 1

டேபிள்ஸ்பூன் எண்ணெய் விட்டு சூடாக்கி, கடுகை வெடிக்க விடவும். பிறகு துருவிய மாங்காய் இஞ்சி சேர்த்து நன்கு வதக்கவும். குறைந்த தணலில் வைத்து இஞ்சி நன்கு வேகும் வரை வதக்கி, பிறகு புளிக்கரைசல் சேர்க்கவும். அந்தத் தண்ணீரில் இஞ்சியானது மேலும் 5 நிமிடங்கள் கொதிக்கட்டும். புளியின் பச்சை வாடை போனதும் மிளகாய் தூள், உப்பு, பெருங்காயம் சேர்த்து நன்கு கலக்கவும். மேலும் 10 நிமிடங்களுக்கு கொதிக்கவிட்டு, துருவிய வெல்லம் சேர்த்துக் கலந்து விட்டு, 20 நிமிடங்கள் மிகக் குறைந்த தணலில் வைத்திருக்கவும். தொக்கு பதத்துக்கு வந்ததும் இறக்கி, நன்கு ஆறியதும் 1 டேபிள்ஸ்பூன் நல்லெண்ணெய் விட்டு, ஏர் டைட் பாட்டிலில் நிரப்பி வைக்கவும்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### காய்கறிகள் விலை கடும் உயர்வு

நெய்வேலி, : நெய்வேலி அருகே உள்ள மந்தாரக்குப்பத்தில், மளிகை பொருட்கள், காய்கறிகள் ஆகியனவற்றின் விலை டவுன்ஷிப்பை விட விலை மலிவாகவும், புகிககாவும் இ(ருக்(கும். இகனால் பெரும்பாலோனோர் மந்தாரக்குப்பத்தை நாடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். வீனங்கேணி, பெரியாக்குறிச்சி. சேப்ளாநத்தம், உய்யகொண்டாராவி, வேப்பங்குறிச்சி, ஊமங்கலம், ஊத்தங்கால் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட கிராம மக்களும், மந்தாரக்குப்பத்தில் தான் வாங்குவது தான் வழக்கம். ஆனால், அண்மையில் பெய்த கனமழை காரணமாகவும், நெய்வேலியை சுற்றியுள்ள கிராமப்புற சிறு விவசாயிகளின் விளைச்சல் இல்லாமல் இருப்பதும், வெள்ளத்தில் அனைத்தும் சேதமானதாலும், விளைநிலங்களில் சுரங்க மண் கலந்த நீர் அதிக அளவில் புகுந்து நிலத்தை ஆக்கிரமித்துள்ளதனாலும், இனி குறைந்தது, 6 மாத காலத்திற்கு விவசாயம் என்பதை கனவில் மட்டும்

தான் காணக்கூடிய நிலையில் உள்ளனர். வெளிமாநில காய்கறிகள் வரத்தை மட்டுமே நம்பி, மந்தாரக்குப்பம் காய்கறி வியாபாரிகள் உள்ளதால், தற்போது காய்கறிகளின் விலை உயர்ந்துள்ளது. தக்காளி கிலோ ரூ.40, சின்ன வெங்காயம் ரூ.35, பல்லாரி ரூ.40, கத்திரிக்காய் ரூ.80, பீன்ஸ் ரூ.60, சவ்சவ் ரூ.70, வெண்டைக்காய் ரூ. 35, அவரை ரூ. 60, முட்டைக்கோஸ் ரூ. 35 என ஒவ்வொரு காய்கறிகளின் விலையும் அதிகரித்துள்ளது. இதனால் காய்கறிகள் வாங்குவதை அப்பகுதியில் உள்ள மக்கள் பெரும் அளவில் குறைத்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

## மாவட்ட வேளாண் திட்டம் உருவாக்க அதிகாரிகள் ஆலோசனை

ஈரோடு, : தேசிய வேளாண் திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்ட அளவில் மாவட்ட வேளாண் திட்டம் உருவாக்குவது தொடர்பான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் வேளாண்மை-ஊரக மேலாண்மை இயக்கம், பவானிசாகர் வேளாண் ஆராய்ச்சி நிலையம் மற்றும் ஈரோடு மாவட்ட வேளாண்மை துறை இணைந்து தேசிய வேளாண்மை முன்னேற்றம் திட்டத்தின் கீழ் மாவட்ட வேளாண்மை திட்டம் உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஆலோசனை கூட்டம் மாவட்டத்தில் உள்ள 14 ஒன்றியங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை துறை, தோட்டக்கலைத்துறை, பட்டுப்புழு வளர்ப்பு, வனத்துறை, வேளாண் பொறியியல், மீன்வளத்துறை, வேளாண் விற்பனைத்துறை, வங்கிகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளை சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டு வேளாண்மை துறையின் முன்னேற்றத்திற்கான திட்டங்கள், வழிமுறைகள், அரசின் உதவிகள் உள்ளிட்டவைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. பவானிசாகர் வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு இத்திட்டத்தின் மாவட்ட தலைவர் பேராசிரியர் துரைசாமி தலைமை தாங்கி திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கி கூறினார். அனைத்து ஒன்றியங்களிலும் ஆலோசனை நடத்தி முடிக்கப்பட்ட பின் திட்ட இறுதி செய்யப்படும் என்று பேராசிரியர் துரைசாமி கூறினார்.

## ‘வனத்துக்குள் திருப்பூர்’ திட்டத்தில் 1.25 லட்சம்மரக்கன்று நட்டு சாதனை

கோவை, : முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமின் கனவை நனவாக்கும் விதத்தில், ‘வனத்துக்குள் திருப்பூர்’ என்ற பெயரில் துவங்கப்பட்ட மரம் வளர்க்கும் திட்டம், தனியார் நிறுவனங்கள், பள்ளி, கல்லூரிகள், கோவில்கள், பொதுமக்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளின் உதவியுடன் தனது இலக்கை தாண்டிய நிலையில், நிறைவு விழா திருப்பூர் தாராபுரம் ரோடு வேலாயுதசாமி மண்டபத்தில் நேற்று நடந்தது. நிகழ்ச்சிக்கு வெற்றி அமைப்பின் தலைவர் சிவராம் தலைமை தாங்கி வரவேற்றார். பொள்ளாச்சி தலைமை வனபாதுகாவலர் கந்தசாமி, மாவட்ட வன அலுவலர் பெரியசாமி, ஈஸ்ட்மென் குழு தலைவர் சந்திரன், சாய ஆலை உரிமையாளர் சங்க தலைவர் நாகராஜன், எம்எல்ஏ தங்கவேலு ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தமிழக வனத்துறை அமைச்சர் ஆனந்தன் பங்கேற்று பேசுகையில், ‘இதுவரை தமிழகத்தில் 1.62 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டு உள்ளது. திருப்பூரில் தான் ‘வனத்துக்குள் திருப்பூர்’ திட்டம் முதன் முதலில் துவக்கப்பட்டது,’ என்றார். சேவை அமைப்புகள், தனியார் நிறுவனங்கள், விவசாயிகள், போலீசார், பள்ளி, கல்லூரிகள், காலியிடங்கள் மரக்கன்றுகள் நடும் பணியில் ஈடுபட்டனர். இத்திட்டம் கடந்த ஆகஸ்ட் 23ம் தேதி ஒரு லட்சம் மரங்கள் என்ற இலக்குடன் துவக்கப்பட்டு, 100 நாட்களில் 1.25 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு சாதனை செய்யப்பட்டுள்ளது.

## காங்கயத்தில் விவசாயிகளுக்கு வேளாண்மை தொழில் நுட்ப பயிற்சி

காங்கயம்,: காங்கயத்தில் வேளாண்மை துறையின் சார்பில் விவசாயிகளுக்கு அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி என்ற தொழில் நுட்ப பயிற்சி ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் அளிக்கப்பட்டது. காங்கயம் கரூர் சாலையில் நடைபெற்ற பயிற்சி கூட்டத்திற்கு, தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் கோவை சாத்தப்பன் தலைமைவகித்தார். இதில் விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல்,

விளைபொருட்களை தரம்பிரித்து சிப்பம் கட்டி ஒழுங்கு முறைவிற்பனைக் கூடங்களில் விற்பனை செய்து தரகு, கமிஷன் இல்லாமல் உடனடிப்பணம் பெற்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. இதில் தம்மரெட்டிபாளையம், ஆலாம்பாடி, குப்பகவுண்டன்வலசு, மருதுறை, காங்கேயம், மீனாட்சிவலசு ஆகிய பகுதிகளை சேர்ந்த 40 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டார்கள். இவர்களுக்கு அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி தொழில் நுட்ப பயிற்சியும் அக்மார்க் தரம்பிரிப்பு பற்றி தேவராஜன் கூறினார். கண்காணிப்பாளர் சிவராமகிருஷ்ணன், வேளாண்மை அலுவலர் ஆகியோர் கருத்துக்களை எடுத்துரைத்தார். விவசாயிகள் கூட்டமைப்பு ஏற்படுத்தி தேங்காய் மூலம் தேங்காய் எண்ணெய் தயாரித்தல், தேங்காய் துருவல் போன்ற விளைபொருட்கள் எவ்வாறு மதிப்புக்கூட்டி விற்பனை செய்யலாம் எனவும். விளைபொருட்களுக்கு பொருள் ஈட்டுக்கடன் திட்டம், நெல், மஞ்சள், தேங்காய் பருப்பு ஆகியவற்றுக்கு 5 சதவீத வட்டியில் சந்தை மதிப்பில் இருந்து 50 சதவீதம் தரப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர்கள்செய்திருந்தனர்.

**மூலிகை மருத்துவத்தில் கறவை மாடுகளுக்கு முதலுதவி சிகிச்சை விவசாயிகளுக்கு செயல்விளக்கம்**

ஜீயபுரம், : தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை கழகம், அந்தநல்லூர் கனரா வங்கி சார்பில் மூலிகை மருத்துவத்தில் கறவை மாடுகளுக்கான முதலுதவி குறித்த செயல் விளக்க முகாம் அயிலாப்பேட்டையில் நடந்தது. கனரா வங்கி அந்தநல்லூர் கிளை முதுநிலை மேலாளர் கிருஷ்ணகுமார் தலைமை வகித்தார். புலிவலம் ஊராட்சி மன்ற தலைவர் மருதை, அயிலாப்பேட்டை பால் சங்க தலைவர் (பொ) ராஜ்குமார் முன்னிலை வகித்தனர். கால்நடை மருத்துவ பல்கலை திருச்சி மைய தலைவர் ரிச்சர்டு ஜெகதீசன் பேசுகையில், கால்நடை வளர்ப்பில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது கறவை மாடு பராமரிப்புதான். நாம் விலை கொடுத்து வாங்கும் கறவை மாடுகளை தேர்வு செய்யும்போது ஆரோக்கியமான சூழலில் வளர்க்கப்பட்டதா என்பதை உறுதி செய்தல்

அவசியம். மேலும் சந்தை பகுதிகளில் கறவை மாடுகளை வாங்குவதை தவிர்ப்பது நல்லது. குறிப்பாக நாம் வளர்க்கும் பசுங்கன்று இரண்டரை வயதில் கன்று ஈனும் வகையில் பராமரிக்க வேண்டும். பசுவின் எடையில் 10ல் ஒரு பங்கு கன்றின் எடை இருக்க வேண்டும் என்று தெரிவித்தார். தஞ்சை கால்நடை மருத்துவ பல்கலைகழக ஆராய்ச்சி மைய பேராசிரியர் மற்றும் தலைவர் புண்ணியமூர்த்தி பேசுகையில், கறவை மாடுகளுக்கு ஏற்படும் சிறு சிறு பாதிப்புகளை தடுக்க வீட்டில் நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களை கொண்டு கை வைத்தியம் செய்யமுடியும். குறிப்பாக மடி வீக்க நோய் பாதிப்பு தென்பட்டால் சோற்றுக்கற்றாழை, மஞ்சள்பொடியுடன் சுண்ணாம்பு சேர்ந்து விழுதுபோல் அரைத்து அதில் தண்ணீர் கலந்து மாட்டின் மடியை கழுவி சுத்தம் செய்த பின்னர் மடி முழுதும் நன்கு நனையும்படி செய்து வந்தால் மடிநோயை குணப்படுத்த லாம். தொழுவத்தை சுத்தமாகவும், சுகாதார முறையிலும் பராமரித்தால் நோய்கள் வராமல் தடுக்கலாம் என்றார். மேலும் மடி வீக்கத்திற்கான மருந்து, கழிச்சல் நோய்க்கான மருந்துகளை செய்வது பற்றிய செயல் விளக்கப்பயிற்சி அளித்தார். முகாமில் அயிலாப்பேட்டை, புலிவலம், கோப்பு உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த பெண்கள் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். முன்னதாக வங்கி வேளாண் அதிகாரி சமய சங்கரி வரவேற்றார். முடிவில் பேங்க் மித்ரா பாக்கியராஜ் நன்றி கூறினார்.

**தாந்தோணியில் நுண்ணீர் பாசன விழிப்புணர்வு முகாம்**

கரூர், : தாந்தோணி வட்டாரத்தில் வட்டார அளவிலான நுண்ணீர்பாசன விழப்புணர்வு முகாம் தாந்தோணி ஒன்றிய தலைவர் ராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. வட்டார தோட்டக்கலை அலுவலர் பேபி வரவேற்றார். தாந்தோணி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் சொர்ணமாணிக்கம், நுண்ணீர் பாசனத்தின் முக்கியத்துவம், அதனால் ஏற்படும் நன்மைகள் நுண்ணீர் பாசனம் அமைப்பதால் உரங்கள் வீணாவதை தடுப்பது பற்றியும், சொட்டுநீர்பாசனம் அமைப்பதால் மின்சார சிக்கனம், களைக்கட்டுப்பாடு போன்றவை பற்றியும்

விளக்கினார். நுண்ணீர் பாசனம் அமைக்க தேவைப்படும் வருவாய்த்துறை ஆவணங்கள், பற்றியும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கும் பதில் அளித்தார். வட்டாரஅளவில் செயல்படுத்தப்படும் இதர மானிய திட்டங்கள் தெரிவிக்கப்பட்டது. சொட்டுநீர் பாசன கருவி பராமரிப்பு மேலாண்மை, எலி மற்றும் அணில் போன்றவற்றால் ஏற்படும் பாதிப்பினை எதிர்கொள்வது, அமில சிகிச்சை, சொட்டுநீர் பாசன பிரதிநிதிகள் சுரேஷ், சிவகுமார் ஆகியோர் விளக்கம் அளித்தனர். உதவி வேளாண்மை அலுவலர்கள் கல்யாணசுந்தரம், பாலசுப்பிரமணியன் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## அரியலூர் மாவட்டத்தில் இறவை நிலக்கடலை சாகுபடி பணி தீவிரம்

அரியலூர், : பருவமழையை மழையை பயன்படுத்தி அரியலூர் மாவட்டத்தில் இறவை நிலக்கடலை சாகுபடி பணிகளை விவசாயிகள் தீவிரப்படுத்தி வருகின்றனர். அரியலூர் மாவட்டத்தில் எண்ணெய் வித்து பயிர்களான எள், சூரியகாந்தி மற்றும் ஆமணக்கு போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டாலும் மார்கழி பட்டத்தில் இறவை நிலக்கடலை பயிரிடுவதற்கு அரியலூரில் 100 எக்டர், ஜெயங்கொண்டத்தில் 262 எக்டர், ஆண்டிமடத்தில் 599 எக்டர், திருமானூரில் 509 எக்டர், தா.பழூரில் 363 எக்டர், செந்துறையில் 86 எக்டர் 1920 எக்டரிலும் ஒட்டு மொத்தமாக 18,397 எக்டரில் இப்பயிர் பயிரிடப்படுகிறது. அரியலார் மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்களில் ஒன்றான நிலக்கடலை பயிரை பல வருடங்களுக்கு அதிகளவில் பயிரிட்டு விவசாயிகள் நல்ல லாபத்தை பெற்றனர். பின்னர் கடந்த சில ஆண்டுக்கு முன்னர் போதிய மழைவரத்து இல்லாமல் அதிகளவில் பயிரிட்ட நிலக்கடலை விவசாயிகளுக்கு மகசூல் இழப்பு ஏற்பட்டு கையை சுட்டுக்கொண்டனர். இந்நிலையில் கடந்தாண்டும் போதிய மழை இல்லாததால் பெயரளவிற்கு மட்டுமே பயிரிட்டனர். இதைக்தொடர்ந்து நாளுக்குநாள் இதே நிலை நீடித்ததால் நிலக்கடலைக்கு மாற்றுப்பயிராக மக்காச்சோளத்தை பயிரிட வேண்டிய சூழ்நிலை இப்பகுதி விவசாயிகளுக்கு ஏற்பட்டது. மக்காச்சோளம் வறட்சியை தாங்கும் பயிராக இருந்ததால் அப்பயிரை பயிரிட்டு நல்ல மகசூலை பெற்றனர். இந்நிலையில் இந்தாண்டு எதிர்பார்த்தபடி பருவமழை நன்கு பெய்துள்ளது. இதைபயன்படுத்தி விவசாய நிலங்களை

உழவோட்டி தயார் நிலைக்கு வைத்து வருகின்றனர். தற்போது மார்கழி பட்டத்தில் இறவை நிலக்கடலை பயிரிடுவதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டியுள்ளனர். இதைத் தொடர்ந்து கடந்த சில தினங்களுக்கு பெய்த மழையை பயன்படுத்தி ட்ராக்டரை கொண்டு நிலங்களை உழுது உழவுப்பணியை விவசாயிகள் தொடங்கி விட்டனர். தற்போது கார்த்திகை, மார்கழி மற்றும் மாசி பட்டம் இறவை நிலக்கடலைக்கு ஏற்ற பருவமாகும். நிலக்கடலையில் அதிக மகசூல் பெறுவதற்கு சித்திரை, வைகாசி மாதங்களில் நிலத்தின் சரிவுக்கு குறுக்கே கோடை உழவு செய்து தாய் அந்துப்பூச்சியின் கூட்டுப் புழுக்களை அகற்றி, நிலத்தடி நீர் சேமிப்பு செய்து, நிலத்தை பண்படுத்தி வைத்தல் அவசியமாகிறது. மேலும் விவசாயிகள் ரகங்களை தேர்வு செய்வதற்கு முன்னர் அதற்குரிய பட்டங்களுக்கு ஏற்றார் போல் தேர்வு செய்தால் விவசாயிகள் அதிக மகசூல் பெறுவதற்கு ஏதுவாக இருக்கும். மேலும் வி.ஆர்.ஐ-2, கோ-2, கோ-3, கோ.ஜி.என்-4, வி.ஆர்.ஐ-4 ஆகிய ரகங்கள் இறவைக்கு ஏற்ற ரகங்கள் என வேளாண்மை அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

‘விதைநேர்த்தி செய்தல் அவசியம்’

இதுகுறித்து சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் ராஜ்கலாவிடம் கூறுகையில், அரியலூர் மாவட்டத்தில் தற்போது பரவலாக மழை பெய்துள்ளது. சம்பா சாகுபடியை தொடர்ந்து தோட்டக்கலை பயிரான நிலக்கடலை சாகுபடி செய்வதற்கு தற்போது ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது பெய்துள்ள மழையை பயன்படுத்தி நிலத்தை நன்கு உழுதல் வேண்டும். பின்னர் இறவையில் விதைக்க ஒரு ஏக்கருக்கு 50 கிலோ விதை தேவை. பெரிய பருப்பு ரகங்களான வி.ஆர்.ஐ.-2, கோ-2, கோ-3, கோ.ஜி.என்-4, டி.எம்.வி.-10 போன்ற ரகங்களாக இருந்தால் கூடுதலாக 5 கிலோ பயன்படுத்த வேண்டும். நன்கு தரமான விதைகள் வேளாண்மை பல்கலைக்கழக ஆராய்ச்சிக்குட்பட்ட இடங்களான திண்டிவனம், விருத்தாசலம், கோவை, பவானிசாகர், ஆழியார் போன்ற இடங்களிலும் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை துறை ஆகிய இடங்களிலும் கிடைக்கின்றன. விதைகளை விதைப்பதற்கு முன் விதை நேர்த்தி செய்தல் மிக அவசியம். விதைகளை உயிர் பூஞ்சாணமான டிரைகோடெர்மா விரிடி அல்லது சூடோமோனாஸ் புளோடிரோசன்ஸ் 1 கிலோ விதைக்கு

முறையே 4 கிராம் அல்லது 10 கிராம் வீதம் விதை நேர்த்தி செய்து பின்பு உயிர் உரங்களான ரைசோபியம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா உடன் தலா 2 பொட்டலம் வீதம் ஆறிய அரிசி கஞ்சியுடன் கலந்து விதைநேர்த்தி செய்ய வேண்டும். விதை நேர்த்தி செய்த விதைகளை நிழலில் உலர்த்தி பின்பு விதைக்க வேண்டும். 30க்கு 10 சென்டிமீட்டர் அளவு இடைவெளியில் (வரிசைக்கு வரிசை 30 செ.மீ. செடிக்கு செடி 10 செ.மீ.) விதைக்க வேண்டும். அடியுரமாக இறவை நிலக்கடலைக்கு ஏக்கருக்கு யூரியா 15 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 87 கிலோ, பொட்டாஷ் 34 கிலோ என்ற அடிப்படையில் இட வேண்டும் (மண் பரிசோதனைப்படி உரமிடுவது மிக முக்கியமாகும்). இவ்வாறு செய்வதன் மூலம் நிலக்கடலையில் நல்ல மகசூலை பெறலாம். என்றார்.

## சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத்தில் விவசாயிகளுக்கு காளான் பயிற்சி

அரியலூர், : சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத்தில் விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பு பயிற்சி நடைப்பெற்றது. அரியலூர் மாவட்டம் சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையம் சார்பில் இம்மையத்தில் காளான் வளர்ப்பு பயிற்சி நேற்று நடைபெற்றது. பயிற்சியினை கிரீடு வேளாண் அறிவியல் மைய தலைவர் நடனசபாபதி தலைமையேற்று துவக்கி வைத்தார். பயிற்சியில் காளான் வகைகள், காளான் குடில் அமைப்பது, சிப்பிக்காளான் வளர்ப்பு முறை ஆகியவை பற்றி விஞ்ஞானி அசோக்குமார் விரிவாக எடுத்துரைத்தார். மேலும் காளான் வளர்ப்பில் முன்னோடி விவசாயியான மயில்வாகனன் காளான் வளர்ப்பில் அவருடைய அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். இப்பயிற்சியில் சிப்பிக்காளான் வளர்ப்பு செயல்விளக்கம், விற்பனை வாய்ப்பு, காளானில் மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் பற்றி விஞ்ஞானி ராஜ்கலா பேசினார்.பயிற்சியில் அரியலூர், பெரம்பலூர், கடலூர், தஞ்சை, திருச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து 34 விவிசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

## அட்மா திட்டம் சார்பில் கிராம விவசாயிகளுக்கு பயிர் மேலாண்மை பயிற்சி

அன்னவாசல், : அன்னவாசல் அடுத்த புதூர் கிராமத்தில் அட்மா விரிவாக்கச் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு 2 நாட்கள் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. அட்மா திட்டம் சார்பில் புதூர் கிராம விவசாயிகளுக்கு நெற்பயிரில் ஒருங்கிணைந்த மேலாண்மை செய்வது குறித்த சிறப்பு பயிற்சி முகாம் 2 நாட்கள் நடைபெற்றது. புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் வட்டாரம்,புதூர் கிராமத்தில் பண்ணை பள்ளியாக நடைபெற்ற இப்பயிற்சி முகாமுக்கு அன்னவாசல் வட்டார வேளாண் உதவி இயக்குநர் சிங்காரம் முன்னிலை வகித்தார். முகாமில் விதைச் சான்றளிப்பு துறை வேளாண் உதவி இயக்குநர் விநாயகமூர்த்தி, குடுமியான்மலை உயிர் உர உற்பத்தி மைய வேளாண் அலுவலர் பத்மபிரியா ஆகியோர் சிறப்புரையாற்றினர். விதைத் தேர்வு, தரமான விதை உற்பத்தி, விதைப் பண்ணை அமைத்தல், அதன் பயன்கள், உயிர் உரங்களைப் பயன்படுத்தும் முறைகள், அதனால் ஏற்படும் பயன்கள் ஆகியன குறித்து விளக்கிக் கூறியதோடு, விவசாயிகளுக்கு இதுதொடர்பாக செயல் விளக்கமும் அளித்தனர். முகாம் ஏற்பாடுகளை தொழில்நுட்ப மேலாளர் ரவிராஜன், வட்டாரத் தொழில்நுட்ப அலுவலர்கள் சக்திவேல், ஆரோக்கியராஜ், ராஜ்குமார், உதவி வேளாண் அலுவலர்கள் ஆகியோர் செய்திருந்தனர்.

## ஒரே மாதத்தில் 25 சென்ட் நிலத்தில் 2 டன் வெள்ளரி விவசாயி சாதனை

மன்னார்குடி, : மன்னார்குடி அருகே திருக்கொல்லி காட்டை சேர்ந்தவர் ஓய்வு பெற்ற வங்கி அதிகாரி தியாகராஜன் (60). இவருக்கு திருக்கொல்லிகாட்டில் 45 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. இதில் நெல் பயிரிட்டு வருகிறார். இந்நிலையில் 25 சென்ட் நிலத்தில் வெள்ளரி சாகுபடி செய்து ஒரே மாதத்தில் 2 டன் வெள்ளரி உற்பத்தி செய்துள்ளார். களிமண் பூமியாக உள்ள கோட்டூர் ஒன்றிய பகுதியில் எப்படி இந்த

வெள்ளரி சாகுபடி சாத்தியமானது என்று தியாகராஜனிடம் கேட்டோம். அப்போது அவர் கூறியதாவது: இந்த பகுதியில் நிலவும் சீதோஷ்ண நிலையை மாற்றியமைத்தால் மலைத்தோட்ட பயிர்கள் உட்பட ஏனைய பயிர்கள் சாகுபடி செய்வதற்கான வாய்ப்பு வருமா என்று இணையதள தேடல் வழியாக ஆராய்ந்தபோது ஒரு வழி கிடைத்தது. அது தான் பாலிஹவுஸ் (பசுமை குடில்). இந்த குடிலை அமைத்தால் பல்வேறு பணப்பயிர், தோட்டக்கலை பயிர்களுக்குரிய சீதோஷ்ண நிலையை செயற்கையாக உருவாக்க முடியும் என்பது தெரிந்தது. இதைதொடர்ந்து 25 சென்ட் விவசாய நிலத்தில் பசுமைகுடிலை அமைத்தோம். அதில் சொட்டுநீர் பாசனம் அமைப்பு ஏற்படுத்தினேன். இதற்கு மொத்தமாக ரூ.9 லட்சம் செலவானது. அதில் 50 சதவீதத்தை மானியமாக தோட்டக்கலைத்துறை தந்தது. அதில் நான் வெள்ளரியை தேர்வு செய்து சாகுபடி செய்துள்ளேன். கொடுமுடிக்கு சென்று கயிறு பித்து அடைத்த பேக்குகளை வாங்கி வந்தேன். அதில் ஒரு பேக்குக்கு 3 வீதம் விதைகளை போட்டு வளர்த்தெடுக்கும் வகையிலும் சொட்டுநீர் குழாய்கள் அந்த பேக்கில் செல்கிற வகையில் வடிவமைத்துள்ளனர். அதில் நான் 25 சென்ட் நிலத்துக்கு 1,250 பேக்குகளை வாங்கினேன். ஒரு பேக்கின் விலை ரூ.100. அதில் சொட்டுநீர் பாசனத்தை பயன்படுத்துவதன் மூலம் இப்பகுதியில் நிலவும் தண்ணீர் பற்றாக்குறையை சமாளித்துவிட முடியும். ஓசூரில் வெள்ளரி ஹைபிரீடு விதைகள் வாங்கினேன். ஒரு விதையின் விலை ரூ.6. பின்னர் கயிறு பித்து அடைத்த பேக்குகளில் 3,750 விதைகளை விதைத்தேன். இதை பராமரிக்க 2 பணியாளர்கள், அவர்களுக்கு உதவியாக நானும் இருந்தேன். விதைத்த 35வது நாளிலிருந்து வெள்ளரி விளைச்சல் துவங்கிவிடும். ஒரு நாள் விட்டு ஒருநாள் வெள்ளரியை பறிக்க வேண்டும். அதிலிருந்து 120 நாள் வரை ஒவ்வொரு செடியும் பலன் கொடுக்கும். அதன்பிறகு வேறு விதையை விட வேண்டும். நாள் ஒன்றுக்கு 30 கிலோ என துவங்கிய உற்பத்தி 280 கிலோவாக அதிகரித்துள்ளது. இன்னும் அதிகரிப்பதற்கு வாய்ப்புள்ளது. சமீபத்தில் மழை பெய்தபோது விளைச்சல் குறைந்திருந்தது. இதுவரை நான் கடந்த நவம்பர் 25ம் தேதி முதல் அறுவடை செய்து வருகிற வெள்ளரியை கணக்கிட்டால் மழை

காரணமாக 15 நாட்கள் விளைச்சல் குறைந்தபோதிலும் 2 டன் உற்பத்தியாகியுள்ளது. எதிர்காலத்தில் 3 மாதத்தில் 20 டன் உற்பத்தி செய்ய முடியும். ஒரு கிலோ ரூ.30 முதல் அதன் தேவைக்கேற்ப ரூ.50 வரை விற்பனை செய்யலாம். நான் சென்னையில் உள்ள ஹோட்டல்களுக்கு விற்பனை செய்து வருகிறேன் என்றார். மன்னார்குடி, : மன்னார்குடி அருகே திருக்கொல்லி காட்டை சேர்ந்தவர் ஓய்வு பெற்ற வங்கி அதிகாரி தியாகராஜன் (60). இவருக்கு திருக்கொல்லிகாட்டில் 45 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. இதில் நெல் பயிரிட்டு வருகிறார். இந்நிலையில் 25 சென்ட் நிலத்தில் வெள்ளரி சாகுபடி செய்து ஒரே மாதத்தில் 2 டன் வெள்ளரி உற்பத்தி செய்துள்ளார். களிமண் பூமியாக உள்ள கோட்டூர் ஒன்றிய பகுதியில் எப்படி இந்த வெள்ளரி சாகுபடி சாத்தியமானது என்று தியாகராஜனிடம் கேட்டோம். அப்போது அவர் கூறியதாவது: இந்த பகுதியில் நிலவும் சீதோஷ்ண நிலையை மாற்றியமைத்தால் மலைத்தோட்ட பயிர்கள் உட்பட ஏனைய பயிர்கள் சாகுபடி செய்வதற்கான வாய்ப்பு வருமா என்று இணையதள தேடல் வழியாக ஆராய்ந்தபோது ஒரு வழி கிடைத்தது. அது தான் பாலிஹவுஸ் (பசுமை குடில்). இந்த குடிலை அமைத்தால் பல்வேறு பணப்பயிர், தோட்டக்கலை பயிர்களுக்குரிய சீதோஷ்ண நிலையை செயற்கையாக உருவாக்க முடியும் என்பது தெரிந்தது. இதைதொடர்ந்து 25 சென்ட் விவசாய நிலத்தில் பசுமைகுடிலை அமைத்தோம். அதில் சொட்டுநீர் பாசனம் அமைப்பு ஏற்படுத்தினேன். இதற்கு மொத்தமாக ரூ.9 லட்சம் செலவானது. அதில் 50 சதவீதத்தை மானியமாக தோட்டக்கலைத்துறை தந்தது. அதில் நான் வெள்ளரியை தேர்வு செய்து சாகுபடி செய்துள்ளேன். கொடுமுடிக்கு சென்று கயிறு பித்து அடைத்த பேக்குகளை வாங்கி வந்தேன். அதில் ஒரு பேக்குக்கு 3 வீதம் விதைகளை போட்டு வளர்த்தெடுக்கும் வகையிலும் சொட்டுநீர் குழாய்கள் அந்த பேக்கில் செல்கிற வகையில் வடிவமைத்துள்ளனர். அதில் நான் 25 சென்ட் நிலத்துக்கு 1,250 பேக்குகளை வாங்கினேன். ஒரு பேக்கின் விலை ரூ.100. அதில் சொட்டுநீர் பாசனத்தை பயன்படுத்துவதன் மூலம் இப்பகுதியில் நிலவும் தண்ணீர் பற்றாக்குறையை சமாளித்துவிட முடியும். ஓசூரில் வெள்ளரி ஹைபிரீடு விதைகள் வாங்கினேன். ஒரு விதையின் விலை ரூ.6. பின்னர் கயிறு

பித்து அடைத்த பேக்குகளில் 3,750 விதைகளை விதைத்தேன். இதை பராமரிக்க 2 பணியாளர்கள், அவர்களுக்கு உதவியாக நானும் இருந்தேன். விதைத்த 35வது நாளிலிருந்து வெள்ளரி விளைச்சல் துவங்கிவிடும். ஒரு நாள் விட்டு ஒருநாள் வெள்ளரியை பறிக்க வேண்டும். அதிலிருந்து 120 நாள் வரை ஒவ்வொரு செடியும் பலன் கொடுக்கும். அதன்பிறகு வேறு விதையை விட வேண்டும். நாள் ஒன்றுக்கு 30 கிலோ என துவங்கிய உற்பத்தி 280 கிலோவாக அதிகரித்துள்ளது. இன்னும் அதிகரிப்பதற்கு வாய்ப்புள்ளது. சமீபத்தில் மழை பெய்தபோது விளைச்சல் குறைந்திருந்தது. இதுவரை நான் கடந்த நவம்பர் 25ம் தேதி முதல் அறுவடை செய்து வருகிற வெள்ளரியை கணக்கிட்டால் மழை காரணமாக 15 நாட்கள் விளைச்சல் குறைந்தபோதிலும் 2 டன் உற்பத்தியாகியுள்ளது. எதிர்காலத்தில் 3 மாதத்தில் 20 டன் உற்பத்தி செய்ய முடியும். ஒரு கிலோ ரூ.30 முதல் அதன் தேவைக்கேற்ப ரூ.50 வரை விற்பனை செய்யலாம். நான் சென்னையில் உள்ள ஹோட்டல்களுக்கு விற்பனை செய்து வருகிறேன் என்றார்.

## சம்பா நெற்பயிரில் குருத்துப்பூச்சி, இலைசுருட்டு புழு தாக்குதலை

## கட்டுப்படுத்துவது எப்படி? வேளாண் துறை ஆலோசனை

அன்னவாசல், : சம்பா நெற்பயிரில் குருத்துப்பூச்சி, இலைசுருட்டுப் புழு தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி? என்பது குறித்து வேளாண் துறை ஆலோசனை தெரிவித்துள்ளது. இதுகுறித்து புதுக்கோட்டை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சந்திரசேகரன், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத் துணை இயக்குநர் சாந்தி, வேளாண் அலுவலர் செல்வி ஆகியோர் கூட்டாக வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: சம்பா நெற்பயிரில் தேவைக்குக் கூடுதலாகக் தழைச்சத்து உரமிடும்போது இலைகள் மிகப் பசுமையாகக் காணப்படுவதால் பூச்சித் தாக்குதல் பேரளவு இருக்கும். இதைத் தவிர்க்கப் பரிந்துரைக்கப்பட்ட அளவுக்கு மேல் தழைச்சத்து உரங்களை இடுதல் கூடாது. இலைவண்ண அட்டையைப் பயன்படுத்தித் தேவைப்பட்டால் மட்டுமே தழைச்சத்து உரத்தை 3 அல்லது 4 முறை பிரித்து இடுதல் வேண்டும். டிரைக்கோடெர்மா ஜப்பானிகம் எனும் முட்டை ஒட்டுண்ணியை நடவு

செய்த 15 நாட்களுக்குப் பிறகு ஏக்கர் ஒன்றுக்கு 2 மி.லி. அளவில் 3 முறை பயன்படுத்தலாம். இதனால் குருத்துப்பூச்சி, இலைசுருட்டுபுழு ஆகியவற்றின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம். இலைசுருட்டுப்புழுவின் தாக்குதலைக் கட்டுப்படுத்த டிரைக்கோடெர்மா கைலோனிஸ் முட்டை ஒட்டுண்ணியை நடவு செய்த 37, 44, 51ம் நாட்களில் வயலில் விடலாம்.புகையான் போன்றவற்றைக் கட்டுப்படுத்த வயலில் நீரை வடிகட்டிக் காயவிட்டுப் பிறகு நீர் பாய்ச்சலாம்.நடவு வயலின் வரப்புகளிலுள்ள களைகள் அகற்றப்பட்டுத் தூய்மையாக இருத்தல் வேண்டும். குலைநோய்க் தாக்குதலைக் தடுக்க சூடோமோனாஸ் புளோரசன்ஸ் எனும் எதிர்உயிர்ப் பூஞ்சாணக் கொல்லியை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் எனும் அளவில் கலந்து விதைநேர்த்தி செய்தும் கைத்தெளிப்பான் மூலம் ஏக்கருக்கு 400 கிராம் எனும் அளவில் தெளித்தும் கட்டுப்படுத்தலாம். அல்லது 10 கிலோ மணலுடன் ஒரு கிலோ மட்கிய தொழுவுரம், ஒரு கிலோ சூடோமோனாஸ் ஆகியவற்றைக் கலந்து வயலில் தூவலாம். விளக்குப்பொறி வைத்துத் தாய் அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிப்பதன் மூலம் பெண் பூச்சி பயிரில் முட்டையிடுவதைத் தவிர்க்கலாம். வேம்பு சார்ந்த பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தியும் கட்டுப்படுத்தலாம். எனவே, நடவு வயலில் மேற்கண்ட தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்துப் பூச்சி, நோய்களைக் கட்டுப்படுத்துவதோடு கூடுதல் மகசூலும் பெறலாம். இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளனர்.தட்டை பயறு விதைத்தல் வயலின் வரப்புகளில் தட்டைப்பயறு விதைப்பதை மேற்கொள்ள வேண்டும். நடவு வயலில் வயல் மட்டத்தில் இருந்து வரப்பின் ஓரத்தில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு உயரத்தில் தட்டைப் பயறு விதைத்தல் வேண்டும். இந்தத் தட்டைப் பயறில் நெற்பயிரைத் தாக்காத அசுவணிகள் உற்பத்தியாகும். இதனால் ஏராளமான பொறிவண்டுகள் கவரப்படும். இப் பொறிவண்டுகள் பயிருக்கு நன்மை பயக்கும் பூச்சியினமாகும். பொறிவண்டுகள் நெற்பயிரைத் தாக்கும் பலவிதமான சாறு உறிஞ்சும் பூச்சிகளைத் தாக்கி அவற்றை உண்டு தாக்குதலைக் கட்டுப்படுத்தும். வரப்பில் தட்டைப் பயறு விதைப்பதால் வரப்பு தூய்மையாகிக் களைகள் நீக்கப்படுவதால் களைகள் மூலம் பரவும் நோய்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. விதைப்பதற்கு ஏக்கர் ஒன்றுக்கு 2 கிலோ

தட்டைப் பயறு மட்டும் போதுமானது. தட்டைப் பயறு விதைப்பதால் உழவர்களுக்குக் கூடுதலாக வருமானமும் கிடைக்கும்.

**வருமானம் அதிகரிக்க மக்காச்சோளம் பயிரிடுங்கள்**

திண்டுக்கல், : மக்கா ச்சோளம் பயிரிட்டால் விவ சாயிகளின் வருமானம் அதிகரிக்குமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.இதுகுறித்து வேளாண்துறையினர் தெரிவித்தாவது: மக்காச்சோளம் பயிரிட பயிர் அறுவடைக்கு பின்பு சட்டிக்கலப்பை கொண்டு ஆழமாக உழவு செய்ய வேண்டும். இறவை நிலத்திற்கு ஹெக்டேருக்கு 10 கிலோவும், மானாவாரி நிலத்திற்கு ஹெக்டேருக்கு 15 கிலோவும் விதைகள் தேவைப்படும். 45க்கு 15 சென்டிமீட்டர் அல்லது 45க்கு 10 சென்டிமீட்டர் இடைவெளி இருக்க வேண்டும். விதைகளை 1 லிட்டர் தண்ணீரில் 20 கிராம் பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் என்ற அளவில் தண்ணீரில் 6 மணி நேரம் ஊற வைத்த பிறகு 5 மணி நேரம் நிழலில் உலர்த்த வேண்டும். 1 ஹெக்டேருக்கு 600 கிராம் அசோஸ்பைரில்லம் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதைப்பு செய்த 3ம் நாளும், பின் 10 நாட்களுக்கு ஒருமுறையும் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். மக்கிய தொழு உரம், நுண்சத்து, மக்கிய தென்னைநார் கழிவுடன் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பேக்டீரியம், சாம்பல் சக்து, தழை மற்றும் மணிச்சத்து போன்றவற்றை வேளாண் அதிகாரிகளை ஆலோசித்து உர நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும். விதைத்த 30 நாட்களில் களை எடுக்க வேண்டும். மக்காச்சோளம் தனிப்பயிராக பயிரிடும்போது அட்ரசின் என்ற களைக்கொல்லியை தெளிக்க வேண்டும். மக்காச்சோளத்தை ஊடுபயிராக பயிரிடும்போது அலகுளோர் என்ற களைக்கொல்லி மருந்தை பயன்படுத்த வேண்டும். குருத்து ஈ, தண்டு துளைப்பான், கதிர்நாவாய், செம்பேன், துரு நோய், தேன் ஒழுகல் நோய், கதிர் பூசாண நோய், அடிச்சாம்பல் நோய் போன்றவை ஏற்பட்டால் வேளாண்அதிகாரிகளை ஆலோசித்து உரிய மருந்துகளை தெளிக்க வேண்டும். கதிர்கள் நன்கு காய்ந்து முற்றிய பிறகு அறுவடை செய்ய வேண்டும். இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம். இவ்வாறு தெரிவித்தனர்.

தினத் தந்தி

DAILY THANTHI

வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

## வைகை அணையில் மீண்டும் தண்ணீர் திறக்க நடவடிக்கை கலெக்டர் நந்தகுமார் தகவல்



ராமநாதபுரம்

ராமநாதபுரம் மாவட்ட விவசாய பயன்பாட்டிற்காக வைகை அணையில் இருந்து மீண்டும் தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலெக்டர் நந்தகுமார் தெரிவித்தார்.

<u>கூடுதல் தண்ணீர்</u>

ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் கலெக்டர் நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அதிகாரி அலிஅக்பர், விவசாய இணை

இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கலந்துகொண்ட விவசாயிகள் தங்களின் கோரிக்கைகள் குறித்து பேசியதாவது:– ராமநாதபுரம் மாவட்ட விவசாயத்திற்காக வைகை அணையில் தண்ணீர் திறந்துவிடப்பட்டு பெரியகண்மாய்க்கு வந்துள்ளது. இதன்மூலம் இன்னும் ஓரிரு கண்மாய்களுக்கு தண்ணீர் சென்று சேரவில்லை. எனவே, வைகை அணையில் இருந்து கூடுதலாக தண்ணீர் திறந்துவிட வேண்டும். இந்த ஆண்டு நெல் கொள்முதல் செய்வதற்கு கூடுதல் கொள்முதல் மையங்கள் திறக்க வேண்டும். உப்பூர் அனல் மின் நிலையத்திற்கு விவசாய நிலங்கள் கையகப்படுத்துவதை கைவிட வேண்டும். இவ்வாறு அவர்கள் பேசினர்.

இதற்கு பதிலளித்து கலெக்டர் நந்தகுமார் பேசியதாவது:– மாவட்டத்தில் தண்ணீர் தேவைப்படும் கண்மாய்களை கருத்தில் கொண்டு மீண்டும் வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்க அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது. அரசின் அனுமதி கிடைத்ததும் ஒருவார காலத்திற்குள் தண்ணீர் திறந்துவிடப்படும். மாவட்டத்தில் கடந்த ஆண்டு 50 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு இருந்தன. இந்த ஆண்டு அனைத்து பகுதி விவசாயிகளுக்கும் கூடுதலாக பயனளிக்கும் வகையில் 75 நெல் கொள்முதல் மையங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

<u>குதிரைவாலி</u>

ஜனவரி மாதம் 12–ந் தேதி முதல் இந்த மையங்களில் விவசாயிகள் தங்களின் நெல்லை நேரில் கொண்டு சென்று விற்பனை செய்யலாம். மிளகாய் பயிருக்கு காப்பீடு செய்வதற்கு பிரிமீயம் செலுத்த ஜனவரி 15–ந் தேதி கடைசி நாளாகும். ரூ.70 கோடியே 40 லட்சம் பயிர்க்கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 14 ஆயிரத்து 292 பேருக்கு ரூ.56 கோடியே 36 லட்சம் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. 15 ஆயிரத்து 900 டன் உரம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதில் 9 ஆயிரத்து 592 டன் வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் போதிய அளவு உரம் கையிருப்பில் உள்ளது.

இந்த ஆண்டு பயிர் காப்பீடு செய்யும் வகையில் மொத்தம் 73 ஆயிரத்து 193 விவசாயிகள் ரூ.2 கோடியே 43 லட்சம் பிரிமீயம் செலுத்தி உள்ளனர். இவ்வாறு பேசினார். இதில் ராமநாதபுரம் அருகே கீழச்சீத்தை பகுதியை சேர்ந்த விவசாயி முருகேசன் என்பவர் தனது 12 ஏக்கர் நிலத்தில்

வளர்ந்திருந்த காட்டுகருவேல மரங்களை அகற்றிவிட்டு குதிரைவாலி விவசாயம் செய்து பயனடைந்து வருவது குறித்து விளக்கி கூறினார். மேலும், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் தமிழ்அமுதன் மாவட்டத்தில் மிளகாய் பயிரிடும் முறைகள் குறித்து விளக்கி பேசினார்.

## வேளாண்மை திட்ட வளர்ச்சி பணிகள் மாவட்ட கலெக்டர் மலர்விழி ஆய்வு



சிவகங்கை,

சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்று வரும் வேளாண்மை திட்ட வளர்ச்சி பணிகளை மாவட்ட கலெக்டர் மலர்விழி நேரில் சென்று ஆய்வு செய்தார்.

<u>கலெக்டர் ஆய்வு</u>

சிவகங்கை மாவட்டத்தில் வேளாண்மைத்துறையின் மூலமாக தேசிய உணவு பாதுகாப்பு திட்டம், திருந்திய நெல் சாகுபடி திட்டம், மாநில விரிவாக்க உறுதுணை சீரமைப்பு திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் மூலமாக பல்வேறு நவீன முறைகள் செயல்படுத்தப்படுகின்றன. இந்த

வேளாண்மை திட்ட வளர்ச்சி பணிகளின் செயல்பாடு குறித்து மாவட்ட கலெக்டர் மலர்விழி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அவர் சிவகங்கையை அடுத்த சாமியார்பட்டி கிராமத்தில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் எந்திர நடவு பணி மற்றும் பாய் நாற்றாங்கால் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த திட்டத்தின் கீழ் புதிய நெல் ரகம் கோ–1 சாகுபடி செய்யப்பட்டுஉள்ளது. இந்த நெல்லை சாகுபடி செய்வதால் ஏற்படும் நன்மைகள் மற்றும் செலவுகள் குறைவது குறித்து கேட்டறிந்தார். மேலும் இந்த திட்டத்தின் கீழ் சாகுபடி பரப்பளவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கும்படி அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

<u>பூச்செடிகள்</u>

இதுபோல் துவங்கால் கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடி திட்டத்தின் கீழ் நெல் பயிரிடப்பட்டதை பார்வையிட்டார். நெல் வயல் வரப்பில் உளுந்து பயிர் சாகுபடி செய்வதை பார்வையிட்டார். மேலும் உளுந்து தவிர செவ்வந்தி, சாமந்தி போன்ற பூச்செடிகளை வளர்க்கவும் ஆலோசனை வழங்கினார். இதைத்தொடர்ந்து முத்துப்பட்டி கிராமத்தில் மாநில விரிவாக்க உறுதுணை சீரமைப்பு திட்டத்தில் நடைபெறும் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பண்ணை பள்ளியில் கலந்துகொண்டு பயிற்சியின் நோக்கம் மற்றும் பயன் குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தார். கலெக்டருடன் வேளாண்மை இணை இயக்குனர் குருமூர்த்தி, துணை இயக்குனர்கள் அழகப்பன், மணிவண்ணன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் சுதர்சன் மற்றும் அதிகாரிகள் உடன் சென்றனர்.

**வேளாண்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் கலெக்டர் நேரில் ஆய்வு**



விருதுநகர்

வேளாண்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து கலெக்டர் ராஜாராமன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

<u>கலெக்டர் ஆய்வு</u>

விருதுநகர் மாவட்ட வேளாண்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து கலெக்டர் ராஜாராமன் ஆய்வு செய்தார். இதன்படி விருதுநகர் வட்டாரத்தில் மெட்டுக்குண்டு கிராமத்தில் தேசிய நீடித்த நிலையான வேளாண்மை இயக்கத்தின் கீழ் 50 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு இருந்த குதிரைவாலி கோ.கே.வி–2 ரக தொகுப்பு திடலை கலெக்டர் ராஜாராமன் பார்வையிட்டார். அறுவடைக்கு தயாராக இருந்த குதிரைவாலி பயிரை அறுவடை செய்து தானியங்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இருப்பு வைத்து அதிக விலைக்கு விற்பனை

செய்திடவும், குதிரைவாலி தானியத்தில் மதிப்பு கூட்டி விற்பனை செய்து அதிக லாபம் பெறவும் அறிவுறுத்தினார். மேலும் குதிரைவாலி பயிர் செய்திருந்த விவசாயிகளையும் விவசாய உற்பத்தியாளர்கள் நிறுவனத்தில் உறுப்பினர்களாகி பயனடையவும் அறிவுரை வழங்கினார்.

ம.ரெட்டியபட்டி வட்டாரத்தில் அணிக்கலக்கியேந்தல் கிராமத்தில் 50 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கடலை பயிரில் மண் பரிசோதனையின் அடிப்படையில் ஒருங்கிணைந்த உர நிர்வாக செயல்விளக்கத்திடலை கலெக்டர் பார்வையிட்டு, தெளிப்பு நீர் பாசனம் கருவியை கொண்டு சிக்கனமாக நீரை பயன்படுத்தவும், கோடையில் நீர் தேவையை சமாளிக்க பண்ணைக்குட்டைகளை அமைக்கவும் அறிவுரை வழங்கினார்.

<u>பருத்தி பயிர்</u>

புளியங்குளம் கிராமத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் பயறு இயக்கத்தின் கீழ் கடலையில் வரப்பு பயிராக பயிர் செய்யப்பட்டு இருந்த வம்பன்–4 ரக செயல்விளக்கத்திடலை கலெக்டர் பார்வையிட்டார்கள். உடையனேந்தல் கிராமத்தில் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் பருத்தி பயிரில் 2 எக்டர் பரப்பில் அமைக்கப்பட்டு இருந்த முதல்நிலை செயல்விளக்கத்திடலை பார்வையிட்டு பருத்தி பயிர்க்கு மெக்னீசியம் சல்பேட் தெளித்து மெக்னீசியம் குறைபாட்டை களைய அறிவுறுத்தினார். அருப்புக்கோட்டை வட்டாரத்தில் செட்டிக்குறிச்சி கிராமத்தில் தேசிய எண்ணெய்வித்து மற்றும் எண்ணெய்பனை இயக்கத்தின் கீழ் 1 எக்டரில் நடவு செய்யப்பட்டு இருந்த புங்கம் மரக்கன்றுகளையும், ஊடு பயிராக சாகுபடி செய்யப்பட்டு அறுவடை நிலையில் இருந்த வம்பன்–3 ரக பாசிப்பயறு பயிர்களையும் கலெக்டர் பார்வையிட்டார்.